வியாபாரம் பெருக விளம்பரம் செய்க !

www.nilafrance.com

# நிலா

இருமாத இதழ்
இலவச வெளியீடு
(4000 பிரதிகள்)

ஆடி - ஆவணி 2014 | எமது அச்சகத்தின் ஓர் விளம்பர வெளியீடு | இல. 28


# பிரான்ஸ் பிராந்தியங்களின் எண்ணிக்கை குறைக்கப்படுகிறது!




நிர்வாக வசதிக்காகவும், அதீத செலவீனங்கள் மற்றும் பொருளாதார நலன்களைக் கருத்திற்கொண்டும், இதுவரை இருந்து வந்த பிரான்சின் 22 பிராந்தியங்களை 14 பிராந்தியங்களாகக் குறைப்பதற்கான திட்டம் அண்மையில் முன்னெடுக்கப்பட்டது. கடல் கடந்த பிராந்தியங்களுடன் சேர்த்து பிரான்ஸ் பிராந்தியங்களின் எண்ணிக்கை 27 ஆகும்.

1789 பிரான்ஸ் புரட்சிக்கு முன்னர் பிரான்ஸ் இராட்சியம், ஒன்பது மாகாணங்களாக பிரிக்கப்பட்டிருந்தது. 1790 ல் இம் முறை நீக்கப்பட்டு 83 மாவட்டங்களாக வரையறை செய்யப்பட்டது. நவீன பிராந்தியங்களின் பிறப்பு 1890ல் அமுல்படுத்தப்பட்டது. ஆயினும் சரியான முறையில் வரையறைக்குட்படுத்தப்பட்டது முதலாம் உலகப்போர்க் காலமான 1917ல் மட்டுமே. பின்னர் பிராந்தியங்களுக்கான தேர்தல் முறைகள், உள்ளூராட்சி முறைகள் எனப் பல மாற்றங்கள் கொண்டு வரப்பட்டன. பிராந்தியங்களின் எண்ணிக்கையும் பல முறை கூடியும், குறைந்தும், இணைந்தும், பிரிந்தும் மாற்றங்களைக் கண்டு வந்தன. இது வரை காலமும் நடைமுறையில் இருந்து வரும் 22 பிராந்தியங்களும் 1950ல் ஏற்படுத்தப்பட்டவையே.

தற்போது சோசலிசக் கட்சியால் அறிவிக்கப்பட்ட மாற்றங்கள் நீண்ட பாராளுமன்ற விவாதங்களுக்குப் பின்னர் வாக்கெடுப்பிற்கு விடப்பட்டு 261 ஒப்புதல் வாக்குகளுடனும், 205 எதிர் வாக்குகளுடனும் 13 பிராந்தியங்களாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. ஆயினும் சட்ட ரீதியான முழுமையான அங்கீகாரம் இன்னமும் கிடைக்கப் பெறவில்லை. இரண்டாம் கட்ட

2 ம் பக்கம் பார்க்க..



# பிரான்ஸில் இன, மத எதிர்ப்புக்களை அனுமதிக்க முடியாது. - அதிபர் பிரான்சுவா ஹொலந்

இஸ்ரேல், பாலஸ்தீனத்துக்கு இடையேயான யுத்தம், இந்த நூற்றாண்டின் பெருந்துயரங்களில் ஒன்று என வர்ணிக்கப்படுகிறது. இரு நாடுகளுக்குமிடையிலான சமாதானப் பேச்சுவார்த்தை மீண்டும் தோல்வியில் முடிவடைந்துள்ளது. அதைத் தொடர்ந்து காஸாவிலிருந்து பாலஸ்தீனத்தின் ராக்கெட் தாக்குதலும், பாலஸ்தீனத்தின் மீதான இஸ்ரேலின் விமானத்தாக்குதலும் இடம்பெற்று வருகின்றன. பொது மக்கள் தொடர்ந்து கொன்று குவிக்கப்பட்டு வருகின்றனர். ஒடுக்கப்படும் பாலஸ்தீன மக்களுக்கு நீதி கோரியும், இஸ்ரேலின் விமானத் தாக்குதல்களை உடனடியாக நிறுத்தக் கோரியும் உலகமெங்கும் பலத்த கண்டனக் குரல்களும் ஆர்ப்பாட்ட ஊர்வலங்களும் நடந்து வருகின்றன.




பாரிஸ் நகரில் குறிப்பிட்ட பாதுகாப்புக் காரணங்களுக்காகவும் குறிப்பாக யூத இன மக்கள் மீதான காழ்ப்புணர்வு மேலும் அதிகரிக்கும் எனக் கருதியதாலும் ஏற்பாடு செய்யப்பட்ட ஆர்ப்பாட்ட பேரணிகளுக்கு அரசு தடை விதித்தது. பாலஸ்தீன மக்கள் சார் அமைப்புகளால் ஏற்பாடு செய்யப்பட்ட பேரணிகள் பிரான்ஸ் உட்துறை அமைச்சரின் தடை உத்தரவையும் மீறி திரண்டு முன் நகர்ந்தன. சில கணங்களிலேயே வெறும் இன எதிர்ப்புக் கோஷங்களாகவும் வன்முறைக் களமாகவும் மாற்றம் கொண்டு அடுத்த அடுத்த

16 ம் பக்கம் பார்க்க..


நிலா
சங்கீதா அச்சகம்
தொடர்புகளுக்கு :



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1ம் பக்கத்தொடர்ச்சி...

விவாதங்கள் சென்ற சபையால் இலையுதிர்கால விவாதங்களில் முன்னெடுக்கப்படவுள்ளது. அங்கும் மாற்றங்கள் பெற்று இறுதி வடிவம் இவ்வருட இறுதிக்குள் அறிவிக்கப்படும். பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்ட சட்டமூலத்தின்படி மாவட்டங்கள் (Département) விரும்பினால் 2016 முதல் வேறு பிராந்தியங்களோடு இணைய வழிகளும் உண்டு.

ஏற்படுத்தப்பட்ட மாற்றங்களில் Corse, Ile de France, Bretagne, Pays de la Loire, Provence-Alpes-Côte d'Azur ஆகிய 5 பிராந்தியங்கள் எந்த மாற்றங்களுக்கும் உட்படுத்தப் படவில்லை. மற்றைய பிராந்தியங்கள் இரண்டாகவோ, மூன்றாகவோ இணைந்து மாற்றம் பெற்றுள்ளன.

கல்வி மற்றும் போக்குவரத்து துறைகளில் பிராந்தியங்கள் கூடுதலான பொறுப்புக்களைக் கையாள்கின்றன. அதேவேளை பிராந்தியங்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு பென்சிலையும் இறப்பரையும் (Crayon et Gomme) பரவிப்பது தீர்வாகாது எனவும், ஆயிரக்கணக்கான நிர்வாக படிவங்களை வைத்துக்கொண்டு (Mille Feuille Administrative) நாட்டின் பிரச்சினைக்கு தீர்வு கண்டுவிட முடியாதெனவும் சமூகவியலாளர்களால் கடும்கண்டனமும் தெரிவிக்கப்பட்டு வருகின்றது.

**01.07.2014 இலிருந்து...**

● அதிவேக வீதிகளில் (Auto route) வாகனங்கள் பழுதுபார்ப்பதற்கான செலவு அதிகரிக்கின்றது

அதிவேக வீதிகளில் வாகனங்கள் பழுதடைந்தால் திருத்துவதற்கான அடிப்படை தொகை 121, 18 யூரோவிலிருந்து 122, 84 யூரோவாக கூடுகிறது.



பழுதடைந்த வாகனங்களை தூக்கி செல்வதற்கான தொகை 149, 85 யூரோவிலிருந்து 151, 90 யூரோவாக கூடுகிறது.

● சமையல் வாயு கட்டணம் 0.1 வீதத்தால் குறைகின்றது.



**பாரிஸ் மாநகரசபைப் பிரிவிலுள்ள**

11 மாநகரசபை ஆலோசகர்கள் சமூகநல வாடகை வீடுகளில் வசிப்பதாக எழுந்த குற்றச்சாட்டுகளை அடுத்து பாரிஸ் மேயர் அவர்களை உடனடியாக அச் சமூகநல வாடகை வீடுகளை விட்டு வெளியேறுமாறு கோரியுள்ளார். அதேவேளை சமூகநல வாடகை வீடுகள் கேட்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வரும் நிலையில் இவ்வாறான அதிகார துஷ்பிரயோகங்கள் தவிர்க்க வேண்டியது கட்டாயமாகும் எனவும் கருத்து தெரிவித்துள்ளார்.

நடந்து முடிந்த உலகக்கிண்ணப் உதைபந்தாட்டப் போட்டியில் சிறந்த இளவயது விளையாட்டுவீரராக பிரான்ஸ் நாட்டுவீரர் Paul Pogba (21வயது) தேர்வு செய்யப்பட்டார்.

உலகக்கிண்ணத்தொடரோடு உலகத் தரவரிசையில் 16 வது இடத்திலிருந்த பிரான்ஸ் அணி 10வது இடத்திற்கு முன்னேறியுள்ளது.



**நம்பிக்கை**

எதை இழந்தீர்கள் என்பது முக்கியமல்ல,
என்ன மிச்சம் இருக்கிறது
என்பதே முக்கியம்!

**சங்கீதா அச்சகம்**

**தரம்**
**குறித்த தவணை**
**குறைந்த விலை**

**39, Bd de La Chapelle**
**75010 Paris**
M°: La Chapelle
Gare du Nord
**sangeethafrance@gmail.com**
**Tél. / Fax :**
**01.44.72.08.94**



## வைத்தியசாலைகளின் அவசர பிரிவில் நோயாளி ஒருவர் சராசரியாக 3 மணி 48 நிமிடம் சிகிச்சைக்காக காத்திருக்கின்றார்!

இந்த நேரத்தைக் குறைப்பதற்கு பிரான்ஸ் அரசு புதிய திட்டம் ஒன்றை வகுத்துள்ளது.

இத்திட்டம் Fast Track அல்லது 'விரைவு வழி' என அழைக்கப்படும். நோயாளி வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை எடுக்கத் தேவை இல்லாத பட்சத்தில் இந்த விரைவு வழியில் சிகிச்சை பெறலாம்.

இப்புதிய செயற்திட்டத்தில் பொது நலத்தொண்டு வைத்தியர்கள் மற்றும் இளைப்பாற்றில் இருக்கும் வைத்தியர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட உள்ளனர்.

இத்திட்டத்தை Assistance Publique Hopitaux de Paris (AP - HP) அரச பொது அமைப்பு பாரிசில் முதன் முதல் நடைமுறைக்குக் கொண்டு வர உள்ளது.

இத்திட்டத்தின் மூலம் நோயாளிகள் காத்திருக்கும் நேரம் அரைப்பங்காகக் குறைக்கப்பட வாய்ப்புகள் உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**தொடரும்** வாகனப் போக்குவரத்து நெரிசல்களை எதிர் கொள்ள போக்குவரத்துத்துறை அமைச்சர் Frédéric Cuvillier புதிய திட்டமொன்றை அறிவித்துள்ளார். பொதுப்போக்குவரத்துத் துறையினர் மற்றும் Taxi கள் போக்குவரத்து நெரிசலில் சிக்கும் போது Bande d'arret d'urgence ஐ பயன்படுத்தலாம் என்பதே இத் திட்டமாகும். பெரு வழித்தடங்களில் குறிப்பாக Autoroute களில் அவசர நிறுத்தங்கள், அவசர உதவி மற்றும் பாதுகாப்பு பிரிவினர்களின் தேவைகளுக்கு உபயோகிக்கக் கூடியவை யாகவே Bande d'arret d'urgence பாதைகள் இன்று வரை இருந்து வருகின்றன. இப்பாதையை பாவனைக்குட்படுத்தவே போக்குவரத்துத்துறை அமைச்சர் திட்டம் வகுத்துள்ளார். இத்தடங்கள் சரியான முறையில் உபயோகிக்கப்படுவதில்லை எனவும், இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தினால் போக்கு வரத்து நெரிசலும், பொதுப் போக்குவரத்தில் ஏற்படும் நேர இழப்புகளும் சரி வர வாய்ப்புகள் உள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

இத்திட்டத்திற்கு வாகன ஓட்டுனர் நலன் சார் அமைப்புகள் குறிப்பாக 40 Millions d'automobilistes அமைப்பு எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. இத் தடங்களுக்கான தேவைகளும், பாவனைகளும் வேறாக இருக்க இத் தடங்களையும் வாகன நெரிசலுக்குட்படுத்துவது எப்படி முறையாகும் எனக் கேள்வியெழுப்பியுள்ளனர். போக்குவரத்துத் துறை அமைச்சர் வாகனப் போக்குவரத்து நெரிசல்கள் அதிகமாகி வருகின்றது எனக் கருதும் பட்சத்தில் அவற்றிற்கான மாற்றுத் திட்டங்களை வகுக்க வேண்டும். உதாரணமாக புதிய பாதைகளை நிர்மாணிக்கலாம் எனக் குறிப்பிட்டவர்கள், இப்பாதையை திறந்து விடுவதால் வேக மீறல்கள் அதிகரிக்க வாய்ப்புள்ளது எனவும் இதனால் அத்தமான விபத்துக்கள் ஏற்படும் எனவும் எச்சரித்துள்ளனர்.



**2014 உலகக்கோப்பை** பிரேசிலில் இனிதே முற்றுப்பெற்று ஜேர்மன் வெற்றிக் கோப்பையை நான்காவது முறையா கத் தட்டிச் சென்றது. இந்த உலகக் கிண்ண தொடரில் பல சாதனைகளும் களம் கண்டன. இந்நிலையில் உலகக் கோப்பை போட்டிகளில் இனிமேல் முறியடிக்கப்பட வேண்டிய சாதனைகள் வருமாறு :

- ஜேர்மன் வீரர் Miroslave Klose இறுதிப்போட்டிகளில் மட்டும் 16 கோல்களைப் போட்டு இதுவரை முதலிடத்திலிருந்த றொனாட்டோவின் (15 கோல்கள்) சாதனையை முறியடித்தார்.
- பிரான்ஸ் நாட்டு வீரரான Just Fontaine 13 கோல்களுடன் (1954) முதலிடத்தில் உள்ளார்.
- பிரான்ஸ் நாட்டு வீரர் Fabien Barthez தொடர்ந்து 10 போட்டிகளில் எந்தவொரு கோல்களும் விடாத பந்து காப்பாளராகும்.
- மிக இளவயதில் போட்டிகளில் பங்கு பற்றிய வீரர் அயர்லாந்தைச் சேர்ந்த Norman whiteside ஆகும். 1990ல் அவரின் வயது 17 ஆகும்.
- வயது கூடியவர்களில் கமரூன் நாட்டைச் சேர்ந்த Roger Milla 42 வயது (1994) கொலம்பியா நாட்டு வீரர் (பந்து காப்பாளர்) Mandragon 43 வயது (2014) ஆகும்.
- 2002ல், போட்டி தொடங்கி 10, 8 செக்கன்ட்களில் துருக்கி வீரர் Hakan Sükür ல் போடப்பட்டதே அதிவேகமாக போடப்பட்ட கோலாகும்.
- ஒரு ஆட்டத்தில் அதிக கோல்களை அடித்த வீரர் ரஸ்யாவைச் சேர்ந்த Oley Salenko ஆகும். 1994ல் ஐந்து கோல்கள் கமரூன் அணிக்கு எதிராக அடித்திருந்தார்.
- இதுவரை ஜேர்மன், பிரேசில் 7 உலகக் கோப்பை இறுதி ஆட்டத்தில் மோதியுள்ளன. ஜேர்மன் 3 முறையையும், பிரேசில் 5 முறையையும் வெற்றியீட்டி உள்ளன.
- மூன்று முறை உலகக் கோப்பைக் கிண்ணத்தை வென்ற வீரர் உதைபந்தாட்டத்தின் அரசன் என வர்ணிக்கப்படும் Pelé மட்டுமேயாகும்.

## மீண்டும் ஒரு நாடு யூரோ வலயத்தில்




**ஐரோப்பாவில் தற்போது 18 நாடுகள் யூரோ நாணயத்தைப் பாவிக்கின்றன.** 1 ஜனவரி 1999ல் பிரான்ஸ், ஜேர்மனி உட்பட 11 நாடுகள் தங்கள் நாடுகளில் யூரோவைப் பொது நாணயமாக அறிமுகப்படுத்தின.

01.01.2015 இல் இருந்து லித்துஆனி (Lituanie) **19வது நாடாக யூரோ வலயத்தில் இணைகின்றது.**

2006 - 2007 காலப்பகுதியில் யூரோ வலயத்தில் இணைய இந்நாடு முயன்றது. நாட்டின் பொருளாதார வளர்ச்சி வீதம் போதாமையினால் நிராகரிக்கப்பட்டது. தற்போது வளர்ச்சி வீதம் குறைந்தது 3.4 ஆக இருக்க வேண்டியதும் ஓர் அடிப்படை நிபந்தனையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## பிரான்சில் 70 விருந்தாளிகளுடனான
# திருமண விழாவொன்றிற்கு செலவு 8257 யூரோக்கள்!



கடந்த பத்து வருடங்களில் பிரான்சில் திருமணங்கள் குறைந்து வருவதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன. இருப்பினும் ஆரம்பமாகும் கோடை காலமென்பது திருமணங்களுக்கான காலம் என்பதில் எந்த மாற்றுக்கருத்துமில்லை என திருமண ஒழுங்கமைப்பு அமைப்புகள் அடித்துக் கூறுகின்றன. பிரான்சில் 70 விருந்தாளிகளுடன் ஒரு திருமணவிழா நடாத்துவதற்கு சராசரியாக 8257 யூரோக்கள் செலவாவதாக தெரிவித்துள்ளனர். பிரான்ஸ் மக்கள் இச் செலவீனத்தை அத்தம் எனக்கருதினாலும், முன்னுரிமை கொடுத்து நியாயப்படுத்தவே செய்கின்றனர்.

குறிப்பிட்ட சில திருமண ங்களிலேயே (16வீதம்) செலவீனங்களை பெற்றோர் ஏற்றுக்கொள்கின்றனர். மீதித் திருமண விழாக்களுக்கான செலவை திருமணம் செய்பவர்களே பங்குபோட்டுக் கொள்கின்றனர். அவர்களுக்கு ஒன்றரை வருட சேமிப்பு தேவைப்படுவதாகவும், குறிப்பாக விடுமுறைப் பயணங்களைத் தியாகம் செய்வதே முக்கிய சேமிப்பு எனவும் குறிப்பிட்டுள்ளனர். ஒரு திருமண விழாவை ஒழுங்கு செய்வதற்கு ஒன்பது மாதங்கள் தேவைப்படுவதாகவும், 35 வயதிற்கு கூடியவர்களின் திருமண விழாக்கள் இள வயதினரை விட மிகக் குறைவான செலவீனங்களையே கொண்டுள்ளதாகவும், பாரிஸ்நகரிலும் பார்க்க பிற மாகாணங்களில் குறிப்பாக கிராமங்களில் திருமண விழாச் செலவுகள் மிகக் குறைவு எனவும் திருமண ஒழுங்கமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். திருமணத்துக்கு அழைக்கப்பட்டவர்களைப் பொறுத்த வரை அன்பளிப்புச் செலவாக 138 யூரோக்களைக் கணக்குக் காட்டியுள்ளனர்.

# DENIM 'டெனிம்' வந்த கதை



1850 களில் தொழிலாளர்கள், போடும் 'ஜீன்ஸ்' என்ற நீளக்காற்சட்டைக்கு அமெரிக்காவில் பற்றாக்குறை ஏற்பட்டது.

லெவி ஸ்ராஸ் (Levi Strass) என்பவர் அமெரிக்காவில் இருந்து ஐரோப்பா வந்து புதிய நீளக்காற்சட்டைகளை வாங்குவதற்கு ஜேர்மனி, பிரான்ஸ் போன்ற நாடுகளில் முயற்சித்துள்ளார். 1860 இல் பிரான்சில் உள்ள நிம் (Nimes) என்ற இடத்தில் பொருத்தமான காற்சட்டைத்துணி கண்டுபிடிக்கப்பட்டு பாரிய அளவில் உற்பத்தி ஆரம்பமாகியது.

நீம் (De Nimes) என்ற நகரில் உற்பத்தி செய்யப்பட்டு அமெரிக்காவுக்கு கருநீல நிறமான நீளக்காற்சட்டைகள் தொழிலாளர்களிற்காக கொண்டு செல்லப்பட்டன.

(De Nimes) நீம் நகரில் இருந்து சென்ற துணிகளின் பெயர் டெனிம் (Denim) என்று பெயர் மருவி 1873ம் ஆண்டில் இருந்து புகழ்பெற்ற பெயராக மாறியது.

தற்போது வருடாந்தம் 230 கோடி 'டெனிம்' விற்பனையாகின்றன. 1890ம் ஆண்டில் இருந்து Levis நிறுவனம் 400 கோடி 'டெனிம்' நீளக்காற்சட்டைகளை விற்பனை செய்துள்ளது.



## பிரான்சில் கருணைக் கொலை செய்த மருத்துவர் விடுதலை!

பயோன் (Bayonne) நகரின் வைத்தியசாலை அவசரப்பிரிவில் பணியாற்றிய 53 வயதுடைய மருத்துவர் பிரான்சுவா பொன் மெய்சோன் (François Bonnemaison) ஐந்து பெண்கள் உட்பட ஏழு பேரை கருணைக் கொலை செய்தார் என்ற குற்றச் சாட்டில் விசாரணைக் குள்ளாக் கப்பட்டார். மருத்துவர் பட்டியலிலிருந்தும் அவரது பெயர் நீக்கப்பட்டிருந்தது.

'கடும் துன்பங்கள் அனுபவிப்பதை முடிவிற்குக் கொண்டு வருவதற்காகவே' தான் இந் நடவடிக்கைகளில் இறங்கியதாக மருத்துவர் தெரிவித்துள்ளார். பங்குனி 2010 - 2011 ஆடி காலப்பகுதியில் நிறைவேற்றப்பட்ட இக்கொலைகள் தாவரங்களில் இருந்து தயாரிக்கப்பட்ட மூலிகை விசம் மூலம் செய்யப்பட்டவை.

கருணைக்கொலை நடைபெற்ற குடும்பத்தினர் எவரும் இந்த மருத்துவருக்கு எதிராக எந்தவிதமான முறைப்பாட்டையும் செய்திருக்கவில்லை.

ஆயுள் தண்டனை பெறக்கூடும் என எதிர்பார்க்கப்பட்ட இவ் வழக்கின் திடீர் திருப்பத்தினால் மருத்துவர் நிரபராதி எனத் தீர்ப்பு வழங்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Aarti tv

# உலகின் மிகப் பிரமாண்டமான தமிழ் தொலைக்காட்சி நிலையம்!



OVER 500 Tamil Movies Available Instanly

30ற்கும் அதிகமான தமிழ் தொலைக்காட்சி சேவைகள் ஒரேதளத்தில்

Local Time Broadcast: Indian Time / UK Time / European Time

பதிவில் இருக்கும் 7 நாட்களுக்குரிய நிகழ்ச்சிகளை எவ்வேளையிலும் பார்வையிட வசதியானது.

சற்றலைற்றுகளை பொருத்த தேவை இல்லை.

Roku | Windows | App Store | Google play

MultiRoom Viewing



ஒரே வீட்டில் பல தொலைக்காட்சிகளை வைத்திருக்கின்றவர்கள் தாங்கள் விரும்பிய தொலைக்காட்சி நிகழ்ச்சியை ஒரே நேரத்தில் பார்க்கமுடியும்.

SPECIAL OFFER — 12 Months Subscription + Set Top Box — €99

24 மணிநேர வாடிக்கையாளர் சேவை இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்

100% LEGAL

01 4607 7345 / 09 7518 0123

WWW.AARTITV.TV

15 Days Money Back GUARANTEE

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Métro Cadet விற்கு அருகில்

# AUTRE VUE

## கண்ணாடிக் கடை

100% Mutuelle மற்றும் CMU ஏற்றுக்கொள்ளப்படும்

தமிழ்மொழி மூலம் உரையாடலாம்!





40%*
சிறப்புத் தள்ளுபடி

23, Rue Lamartine - 75009 Paris

Tél.: 01 53 20 04 10 / 09 67 33 12 83
Fax : 01 53 20 04 10
mail : autrevueparis09@gmail.com





சகலவிதமான தரமான Optical Frames, Sunglasses, Contact lenses மற்றும் கண்ணாடிகள் தொடர்பான சகல உபகரணங்களும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்

* நிபந்தனைகள் வர்த்தக நிலையத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ALSTOM



# சென்னையிலும் மெத்ரோ
## பிரான்ஸ் விற்பனை செய்கிறது!

பல் துறைகளில் கால் பதித்த அல்ஸ்தொம் நிறுவனம் (Société Alstom-France) தற்போது சென்னை மெத்ரோ (Métro) திட்டத்திற்கும் தொடரூந்துகளை விற்பனை செய்ய ஆரம்பித்துள்ளது.

பிரான்சின் அல்ஸ்தொம் நிறுவனத்திடம் 42 தொடரூந்துகளை தயாரிப்பதற்கு சென்னை மெத்ரோ ரெயில் அமைப்பு ஒப்பந்தம் செய்துள்ளது. இதில் 7 தொடரூந்துகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. இரண்டாங்கட்டமாக 2 ரயில்கள் கப்பலில் சென்று கொண்டிருக்கின்றன.

மீதமாக உள்ள 33 ரயில்கள் ஆந்திர மாநிலத்தில் அமைக்கப்பட்டுள்ள தொழிற்சாலையில் அல்ஸ்தொம் நிறுவனத்தினால் தயாரிக்கப்படவுள்ளன.

நான்கு பெட்டிகளை இழுத்துச் செல்லக்கூடிய 42 புகையிரதங்களின் விலை 243 மில்லியன் யூரோக்களாகும். இந்திய ரூபாவில் இதன் விலை 1950 கோடி ரூபாக்களாகும்.

சென்னையின் முதலாவது மெத்ரோ தடம் வடசென்னை - அண்ணா விமான நிலையம் ஆகியவற்றிற்கு இடைப்பட்ட 23 கிலோமீற்றர் நீளமான பாதையில் இயங்கும்.

இதில் 10 புகையிரத நிலையங்கள் சுரங்கப்பாதையில் அமைகின்றது. மீதி 6 நிலையங்களும் உயர்த்தப்பட்ட தளத்தில் அமைகின்றன. 22 கிலோ மீற்றர் நீளமான இரண்டாவது தடம் சென்றல் (Central), மவுண்ட் (Mount) ஆகிய இடங்களிற்கு இடையில் இயங்கும். இத் தடத்தில் 16 நிலையங்கள் உள்ளன.

ஒரு கோடி மக்களைக் கொண்டிருக்கும் சென்னை நகரில் இப்பாதையில் மாத்திரம் 5 இலட்சம் பயணிகள் நாளாந்தம் பயணிக்கக்கூடிய ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

சாதாரணமாக 3 நிமிடங்களிற்கு ஒரு புகையிரதமும், சன நெருக்கடியான வேலை பயண நேரத்தின்போது 2 நிமிடத்திற்கு ஒரு புகையிரதமும் இயங்கும்.


# வேலைக்கு ஆள் தேவை!
## பிரச்சாரத்தில் இராணுவம்

**பிரான்சில்** பொருளாதார நெருக்கடி, வேலை வாய்ப்பின்மை தொடர்ந்தாலும் இராணுவத்தில் பணிபுரிய தேவைப்படுபவர்களின் எண்ணிக்கை உயர்வாகவே உள்ளது என இராணுவ தொழிற்துறைசார் அதிகாரி தெரிவித்துள்ளார். இராணுவத் தரைப்படை வருடத்திற்கு 17 முதல் 29 வயதான 10 ஆயிரம் இளைஞர்களைப் பணிக்க மர்த்தி வருகிறது. கணனியியல், மருத்துவம், மொழிபெயர்ப்பு என 150 விதமான தொழிற் துறைகளில் வேலைக்கு ஆட்கள் தேவைப்படுவதாகவும், இராணுவம் என்றவுடன் ஆயுதத்துடன் முன்னணியில் நிற்கும் ஒரு படை வீரனை மட்டும் கற்பனை செய்து விடக் கூடாது எனவும் மேலும் அவர் தெரிவித்துள்ளார்.



பிரான்சில் இராணுவம் இளைஞர்களைப் பணிக்கமர்த்துவதில் GDF, கல்வித்துறை இன்னும் Mc Donald க்கு சவாலாக 5வது இடத்திலுள்ளது. சில துறைகளில் ஆட் பற்றாக்குறையை தவிர்ப்பதற்கு குறிப்பாக கணனித்துறை (Bac +5) மற்றும் இயந்திரத் தொழில்நுட்பத்துறை போன்றவற்றிற்காக இராணுவம் குறிப்பிட்ட சில Lycée களுடனும் இணைந்து செயற்பட்டு வருகின்றது என்பதும் குறிப்பிடத்தக்கது. எந்தவித சான்றிதழ்களோடும் இணைய முடியும். உங்கள் தகுதிக்கு ஏற்ப பணிக்கமர்த்தப்படுவீர்கள். சாதாரணமாக இராணுவத்தில் பணிபுரிந்த 80 சதவீத இளையவர்கள் இராணுவத்தை விட்டு வெளியேறி சில மாதங்களிலேயே புதிய வேலையை தேடிக்கொள்ள தகுதியுள்ளவர்களாகவும் உள்ளனர் என மேலும் தெரிவித்துள்ளார்.

**மெத்ரோ-11** Mairie des Lilas முடிவிடத்திலிருந்து மாற்றம் பெற்று Rosny-Sous-Bois, Montreuil பகுதிகளுக்குள் செல்வதற்கான திட்டம் அறிவிக்கப்பட்டிருந்தது அது போன்றே ட்ராம் T1 நீட்சி தொடர்பாகவும் வாக்குறுதிகள் கொடுக்கப்பட்டிருந்தன. இத் திட்டங்கள் தற்போது நிறைவேற்றப்படுமா




என்ற ஐயப்பாடு எழுந்துள்ளது. இதையடுத்து Montreuil நகர அதிபர் Patrice Bessac தலைமையில் "அரசே கொடுத்த வாக்குறுதிகளைக் காப்பாற்று" எனும் தொனிப்பட எதிர்ப்பு கையொப்ப மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Fire Phone

**மின் வணிகத்துறையில்** (E-Commerce) தனிக்காட்டு ராஜாவான Amazon நிறுவனம், தனது இறுதி வரவாக கைத்தொலைபேசிகளை அறிமுகம் செய்துள்ளது. Fire phone என இதற்கு பெயர் சூட்டியுள்ளது. ஐ போன் தொழில்நுட்பத்திற்கும், சாம்சொங்க் தொலைபேசிகளுக்கும் சவாலாக இவை களமிறங்குகின்றன. ஐந்து வருடங்கள் மிக இரகசியமான முறையில் தயாரிப்புப் பணிகள் பேணப்பட்டன. Amazon நிறுவனம் 2007ல் Kindle என அழைக்கப்படும் புத்தகங்கள் வாசிப்பதற்கான சாதனம், பின்னர் Fire டாப்லட். 2014 ஆரம்பத்தில் Fire தொலைக்காட்சி என அனைத்து புதிய தயாரிப்புகளிலும் வெற்றி



வாகை சூடியவர்கள் தங்கள் Fire Phone தொலைபேசிகள் மூலம் வெற்றியீட்டுவார்கள் என்பது தொழில்நுட்பத் துறையினரின் பெரும்பாலான கருத்தாகவுள்ளது. Fire phone ன் திரைவடிவமைப்பு

பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. இத்திரை வடிவமைப்பில் புகுத்தப்பட்டுள்ள புதிய தொழில்நுட்பத்தின் மூலம் பிரத்தியேகக் கண்ணாடிகள் இல்லாமலே திரையில் முப்பரிமாணத் தோற்றங்களைச் சாதாரணமாகப் பார்க்க முடியும். அத்துடன் கண்களின் அசைவுகளிற்கேற்ப பிரதிபலிப்புகள் அசையவுமுள்ளன.

Fire phone கள் யூலை மாத நடுப்பகுதியில் அமெரிக்காவில் வெளியாகவுள்ளன. பிரான்சிற்கான திகதிகள் இன்னமும் அறிவிக்கப்படவில்லை. "லேட்டாக வந்தாலும் லேட்டஸ்ற்றாக சாதனைகள் பல காத்திருக்கின்றன"

# கார்ஜ் லே கொனெஸ் நகரசபையின் துணைமேயராக தமிழ்ப் பெண்!

தமிழர்கள் செறிந்து வாழும் பாரிசின் புறநகர் பகுதியான கார்ஜ் லே கொணெஸ் (Garges les Gonesse) பகுதிக்கான நகராட்சி மன்றத் தேர்தலில், பிரான்சின் முக்கிய வலதுசாரிக் கட்சியான UMP சார்பில் போட்டியிட்ட சேர்ஜியா மகேந்திரன் என்கின்ற இளம் தமிழ் பெண் பெரு வெற்றியீட்டியதுடன் நகரத்தின் துணைமேயராகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளார். யாழ்ப்பாணம், கொழும்புத்துறையை சேர்ந்த செல்லப்பா மகேந்திரன்– தேவி, தம்பதிகளின் புதல்வியான இவர் பிரான்ஸின் சட்டத்துறையில் பட்டம் பெற்று ஒரு சட்டத் தரணியாக பணியாற்றி வருகிறார்.



39 ஆசனங்களைக்கொண்ட கார்ஜ் லே கொணெஸ் நகர சபைக்கான இந்தத் தேர்தலில் UMPகட்சி 30 ஆசனங்களைப்பெற்று பெரு வெற்றியீட்டியது. கட்சியின் முக்கியஸ்தர் Maurice Lefèvre 3வது முறையாகவும் நகரபிதாவாக தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.


**ஆர்.ரி.எம். பிறதர்ஸ்**

**இன்ரநெஷனல்**

வழங்கும்

**22வது**

**கலைத்தென்றல்**

**28. 09. 2014**

இடம் :

La Scène Watteau

(RER 'E' : Nogent le Perreaux)




# பிரான்ஸ் இளவயதினரின் மது - போதைப்பொருள் பாவனை, பாதுகாப்பற்ற உடலுறவு என்பன அதிகரித்துள்ளன.



1975ம் ஆண்டில் இருந்து இயங்கி வரும் Ipsos நிறுவனமானது, கடந்த ஐந்துஆண்டுகளில் பிரான்சில் இளவயதினரின் மாற்றம்பற்றிய விரிவான அறிக்கையொன்றை கடந்த யூன் மாதம் சமர்ப்பித்துள்ளது.

15 - 18 வயதில் உள்ளவர்களில் 19 வீதத்தினர் போதையேறும் வரை மது அருந்துபவர்களாகவும், அதில் அண்ணளவாக அரைப்பங்கினர் பெண்களாகவும் உள்ளனர். இவர்களுள் 17 வீதமானோர் போதைப்பொருள் பாவிப்பவர்களாக உள்ளனர்.

மேலும் 15 - 18 வயதில் 11 வீதம் ஆண், பெண் இருபாலாரும் பாதுகாப்பற்ற உடலுறவில் ஈடுபடுகின்றனர்.

பத்து இளவயதினருள் ஒன்பது பேர் அபாயம் அல்லது விளைவு பற்றி கவலைப்படாமல் துணிந்து காரியத்தில் இறங்க விரும்புபவர்களாகவே உள்ளனர் (89%)

85 வீதமான இளைஞர்கள் பாலியல் ரீதியான தகவல்களைப் இலகுவாகப் பெற்ற வண்ணம் உள்ளனர்.

73 வீதமான இளையோர் சிகரட், கஞ்சா போன்றவற்றை பாவிப்பவர்களாக உள்ளனர்.

கருத்துக்கணிப்பு எடுக்கப்பட்ட 40 வீதமான இளையோர், தங்கள் வாழ்வில் தாங்கள் நம்பிக்கையுடன் இருப்பதாகவும் பலவீனங்களையும் தவறுகளையும் கடந்து விடுவோம் என்றும் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிரான்ஸ் மக்கள் பெருமையாகக் கருதும் கல்வித்தரம் BAC

**பிரான்சில்** BAC (Baccalaurréat) பரீட்சைகள் ஒரு மாணவனின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் தகுதிச் சான்றிதழாகவும், தேடும் வேலைக்கு அளவுகோலாகவும், பட்டப்படிப்புக்குத் திறவுகோலாகவும் கல்வி மாந்தர்களால் மட்டுமல்லாது பிரான்ஸ் நாட்டின் ஒவ்வொரு குடிமகனாலும் கருதப்படுகிறது. 1808ம் ஆண்டு முதலாம் நெப்போலிய மன்னனால் இப்பரீட்சை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பிரான்ஸ் மக்கள் கொண்டாடும் ஆனால் மாணவர்களுக்கு பதட்டத்தை அதிகரிக்கும் இப் பரீட்சைகள் கடந்த யூன் மாதம் 16ம் திகதி முதல் நடைபெற்றது.

இப்பரீட்சையில்,

- 686907 மாணவர்கள் பரீட்சைகளில் பங்குபற்றினர்.
- 50 வீதம் பொதுப்பிரிவிலும், 30 வீதம் தொழில்முறைப்பிரிவிலும் 20 வீதம் தொழில்நுட்பப் பிரிவிலும் பங்கு பெற்றார்கள்.
- இதுவரை 5 நாட்கள் மட்டுமே நடைபெற்று வந்த இப்பரீட்சை இவ்வருடம் 6 நாட்களாக மாற்றம் பெற்றுள்ளது. தவிர 21600 மாற்றுத்திறனாளிகளுக்கான காலமும் நீடிக்கப்பட்டுள்ளது.
- இப்பரீட்சை பிரான்சில் மட்டுமல்லாது லெபனான், தென் அமெரிக்கா உட்பட 85 நாடுகளில் நடைபெறுகின்றது.
- வெளிநாடுகளில் மட்டும் 16295 மாணவர்கள் பங்குபற்றுகின்றனர்.
- ஒவ்வொரு வருடமும் அதிகூடிய வயது பரீட்சையாளரும் குறைந்த வயது பரீட்சையாளரும் ஆர்வமாகக் கவனிக்கப்படுகின்றனர். இது வரை 91 வயதே அதிகூடிய வயதாக இருந்தது. இம்முறை 92 வயதானவர் ஒருவர் இப்பரீட்சையில் பங்குபற்றுகின்றார். குறைந்த வயதாக 13 வயது பதிவாகியுள்ளது.
- 4 மில்லியன் விடைத்தாள்கள் 170000 ஆசிரியர்களால் திருத்தப்பட்டது.
- ஒரு விடைத்தாள் திருத்த 5 யூரோக்களும், வாய்மொழிப் பரீட்சைக்கு 1 மணி நேர ஊதியமாக 9,60 யூரோக்களும் வழங்கப்பட்டன.
- கைத்தொலைபேசிகளினூடான பரீட்சை மோசடிகளை (37வீதம்) தவிர்க்க சகல பரீட்சை நிலையங்களிலும் கைபேசிகளைக் கண்டறியும் கருவி பொருத்தப்பட்டிருந்தது.
- ஒரு மாணவனுக்கு அரசு 80 யூரோக்களை இப்பரீட்சைக்காக செலவு செய்கின்றது. இதில் அச்சுச் செலவு, பரீட்சை நிலைய வாடகை, விடைத்தாள் திருத்துவதற்கான செலவு போன்றவை அடங்கும்.

2014ற்கான மொத்தச் செலவீனமாக அண்ணளவாக 50 மில்லியன் யூரோக்கள் செலவாகின்றன. இது அதீதமான செலவீனமாக விவாதத்திற்கு உள்ளானது. இப் பரீட்சை முறையை நிறுத்தக்கூட எதிர்ப்புகள் எழுந்தன. இவ் விவாதத்திற்கு பதிலுரைத்த கல்வி அமைச்சர் Benoit Hamon, ஒரு மாணவன் BAC பரீட்சைமூலம் பட்டப்படிப்புக்குத் திறவுகோலாக அமையும் வாய்ப்பை வழங்க, பிரான்ஸ் 80 யூரோக்களை செலவு செய்வதில் பெருமையடைகின்றது எனத் தெரிவித்துள்ளார். ●




## துலுஸ் நகரில் ஐரோப்பிய சட்டக் கல்லூரி

### European School of Law - Toulouse (ESLT)


ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் வழங்கி வரும் பல்வேறுபட்ட சட்ட நியதிகளைத் தெரிந்து கொள்வதற்காகவும், சட்ட வேறுபாடுகளை கற்றுக்கொள்வதற்குமான சட்டக் கல்லூரி பிரான்ஸ் நாட்டின் துலுஸ் (Toulouse) நகரில் அமைகின்றது.

எதிர்வரும் செப்ரம்பர் மாதத்தில் 400 மாணவர்கள் இப் புதிய கல்வி நெறிக்காக சேர்க்கப்படவுள்ளனர். இங்கு இணையும் மாணவர்கள், பிரான்சினுடைய சட்டமுறைகளை மாத்திரம் அல்லாமல் ஏனைய ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் பல்வேறுபட்ட சட்ட முறைகளை கையாளும் வண்ணம் உருவாக்குவதே தங்கள் நோக்கம் என கல்லூரி இயக்குனரான சில்வென் பெறுஸ்ஸெத்தோ (Mme. Styvaine Peruzzetto) தெரிவித்துள்ளார்.

இத் துறைக்கு விண்ணப்பிக்கும் மாணவர்கள் பட்டதாரிக் கல்வியை முடித்து Master 1ம் ஆண்டு அல்லது 2ம் ஆண்டில் இருக்க வேண்டும். அத்துடன் அவர்களின் மொழி அறிவின் தரத்தைப் பரிசீலிப்பதற்கான நேர்முகப் பரீட்சையிலும் தேர்ச்சி அடைய வேண்டும்.

1000 வரையிலான விண்ணப்பதாரர்களில் இவ்வாண்டு 40% ஆனோர் இத் துறைக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

வெளிநாடுகளில் இருந்து இத்துறைக்குத் தெரிவு செய்யப்படுபவர்கள் இக் கற்கை நெறிக்கு 3000 யூரோக்கள் வரை பணம் செலுத்த வேண்டும்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரான்ஸ் தமிழர் நிகழ்வுகள்

**● அனலைத்தென்றல்**

அனலைதீவு கலாச்சார ஒன்றியத்தின் அனலைத்தென்றல் 22.06.2014 அன்று Bagnolet இல் நடைபெற்றது.

**● தமிழர் விளையாட்டு விழா**

தமிழர் புனர்வாழ்வுக்கழகம் பிரான்ஸ், உலகத்தமிழர் பண்பாட்டு இயக்கம் பிரான்ஸ் ஆகியன இணைந்து நடாத்திய தமிழர் விளையாட்டு விழா 06.07.2014 அன்று நடைபெற்றது.

**● மகளிர் விழா**

கம்பன் கழக மகளிரணி நடத்திய ஐந்தாம் ஆண்டு மகளிர் விழா 29.06.2014 அன்று சார்சலில் நடைபெற்றது.

**● நூல் வெளியீடு**

திருமறைக்கலாமன்றத்தின் "முற்றம்" 50வது இதழ் வெளியீடு 22.06.2014 அன்று பாரிஸ் சிற்றன்னை தேவாலய மண்டபத்தில் இடம்பெற்றது.

**● இசை நாதம்**

ஶ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம், ஶ்ரீ பத்திரகாளி இசைக்குழுவினர் இணைந்து வழங்கிய இசை நாதம் 31.05.2014 அன்று Marx Dormoy மண்டபத்தில் நடைபெற்றது.

**● நூல் வெளியீட்டு விழா**

திரு. க. அரியத்தினம் அவர்களின் "ஈழத்துச் சக்கரவர்த்தி எல்லாளன்" வரலாற்று ஆய்வு நூல் 13.07.2014 அன்று Marx Dormoy மண்டபத்தில் நடைபெற்றது.

**● ஆக்காட்டி சிற்றிதழ்**

இருமாத இலக்கிய இதழ் ஆக்காட்டி 16.07.2014 அன்று பாரிஸ் அறிவாலயம் புத்தகசாலையில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

**● சங்கொலி 2014**

தமிழர் கலைபண்பாட்டுக்கழகத்தின் தேச விடுதலை பாடற்போட்டி "சங்கொலி 2014" 19.07.2014 அன்று Marx Dormoy மண்டபத்தில் நடைபெற்றது.


**சங்கீதா அச்சகம்**
01.44.72.08.94


**அறிவுத்தேவையைவிட கவனக்குறைவே அதிக கஷ்டத்தை உருவாக்கிவிடுகிறது**
– வின்சன் சேர்ச்சில்

## நிலா குறுக்கெழுத்துப் போட்டி - 12

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | | 3 | | 4 |
| | ■ | | 5 | ■ | | ■ | |
| | 6 | | | ■ | | ■ | |
| | 7 | | | | 8 | 9 | |
| 10 | | | | ■ | | | |
| | 11 | | 12 | | | | |
| ■ | | ■ | 13 | | | | ■ |
| ■ | 14 | | | 15 | | | |

**மேலிருந்து கீழ்**

*1. 1965ல் சிறீதர் இயக்கத்தில் வெளியான திரைப்படம். ஜெயலலிதா, சிறீகாந்த், வெண்ணிற ஆடை மூர்த்தி மற்றும் நிர்மலா நடித்துள்ளனர் (6)*
*2. குற்றவாளிகள் சம்பவ இடத்தில் விட்டுச் செல்வது பொலிஸ் தேடுவது (4)*
*3. தெற்காசியப் பகுதியைச் சேர்ந்த ஒரு பூக்கும் தாவரம். இம்மரப்பூ சிவபெருமானின் பூசைக்குரியதாக இந்து சமயத்தினர் கருதுகின்றனர் (3)*
*4. அடிப்படை மனித உரிமைகளில் ஒன்று (6)*
*5. துன்பம் எதிர்ச்சொல் (4)*
*7. போருக்குச் செல்லும் வீரர்கள் அணியும் இரும்பிலான பாதுகாப்பு உடை (4)*
*8. நெருப்பு (4)*
*9. குமுதம் நிறுவனத்தால் வெளியிடப்படும் இலக்கிய மாத இதழ் (4)*
*12. நெல்லிலிருந்து அரிசியை எடுத்தபின் மிஞ்சுவது உமி என்றும் சொல்லலாம் (3)*

**இடமிருந்து வலம்**

*1. வயிற்றுக்கோளாறு, மலச்சிக்கல் போன்றவற்றிற்கு சிறந்த மருந்து. தமிழர் சமையலில் பயன்படுத்தப்படும் ஒரு சுவைப்பொருள் (5)*
*3. பெண்கள் அணியும் ஆபரணங்களில் ஒன்று (3)*
*6. கே.வி. ஆனந்தின் இயக்கத்தில் 2009ல் வெளியான சூர்யா நடித்த திரைப்படம் (3)*
*7. கம்பராமாயணம் பாடிய புலவன் (4)*
*10. எதிர்கால பயன்பாட்டிற்காக சேமிக்கப்படும் கோப்புகளை இவ்வாறு அழைக்கலாம் (4)*
*11. ஒலியின் வண்ணம் (4)*
*13. வினாக்களுக்கு நாம் கொடுப்பது (2)*
*14. நடிகர் அஜித்தை ரசிகர்கள் அன்பாக அழைப்பது (2)*
*15. கவச குண்டலத்துடன் பிறந்த குந்திதேவியின் மகன் (4)*

நிலா குறுக்கெழுத்துப்போட்டி இல.11ல் பரிசு பெறுபவர்கள்.
1. ஜேம்ஸ் நாதன் (Montreuil)
2. யோகேஸ்வரி மேவின் (Aulnay Sous Bois)
3. அஸ்வின் (Blanc Mesnil)

✔ உங்கள் பதில்களை 10 செப்ரெம்பர் 2014 இற்கு முன்னர் அனுப்பி வைக்கவும்
✔ சரியான பதில்கள் எழுதியவர்களில் மூவர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும்.

● சரியான விடை எழுதி அனுப்பிய அனைவருக்கும் எமது வாழ்த்துக்கள்

● சரியான விடையை அனுப்பியவர்களின் முழு விபரங்களையும் www.nilafrance.com இல் பார்க்க முடியும்.

**பரிசில்களை சங்கீதா அச்சகத்தில் நேரில் வந்து நீங்கள் பெற்றுக்கொள்ளலாம்!**

**• அனுப்ப வேண்டிய முகவரி •**
**NILA, 39, Bd. de la Chapelle - 75010 PARIS**




**பாரிஸ்** மாகாணத்தில் உள்ள ஹோட்டல்களில் தங்குபவர்களிற்கு இரவொன்றிற்கு தலா 2 யூரோக்கள் மேலதிக வரிவிதிக்க சட்ட சபையில் சட்ட மூலம் கொண்டுவரப்பட்டுள்ளது. செப்ரம்பர் 1ம் திகதியில் இருந்து இச்சட்டமூலம் அமுலுக்கு வருகின்றது. தற்போது பாரிஸ் மாகாணத்திற்கு மாத்திரமே இச்சட்டமூலம் செல்லுபடியாகும். இவ்வருவாயில் 140 மில்லியன் யூரோ பாரிஸ் மாகாணத்தின் போக்குவரத்து வசதிகளிற்காக பயன்படுத்தப்படும்.

## இதய அஞ்சலி




**பிரசாத் அண்ணை**

சமூக ஆர்வலரும், செயற்பாட்டாளருமான பிரசாத் அண்ணன் அவர்களின் திடீர் மறைவுச்செய்தியால் ஆழ்ந்த துயரடைந்தோம்.

எமது நிலா சஞ்சிகையின் தீவிர அபிமானியும், நிலா வளர்ச்சியில் அக்கறையோடு பங்கேற்று வந்தவருமான அவருக்கு நிலா தனது ஆழ்ந்த அஞ்சலியை சமர்ப்பிக்கின்றது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Since 1987

Gold

Dian

# Mohan Jewellery

27வது வருட நி

# தங்கத்திரு

1வது பரிசு

10.00

பெறுமதியான தங்



எமது 27வது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடைபெறும் சிறப்பு தங்கநகை விற்பனையில் நீங்களும் கலந்து கொண்டு எம்மிடம் தங்க நகைகளை தெரிவுசெய்து உங்கள் பெயர், முகவரி என்பவற்றை அதிர்ஷ்ட கூப்பனில் பதிந்து பெட்டகத்திலிடுவதன் மூலம் அதிர்ஷ்டக் குலுக்கலில் பங்குபற்றி பரிசில்களை வெல்லுங்கள்!

ஆ

அதிர்

10 யூன் 2

201, Rue du Fg. St. Denis - 75010 Paris (M°: La Chapelle / Gare du Nord)

Tél.: 01 42 05 65 26 - Fax : 09 50 31 01 82

E-mail : mohanjm@hotmail.fr mohanjewellerymart

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பிரான்சில்** கடந்த ஏப்ரல் மாதம் வெளியாகி தொடர்ந்து திரையரங்குகளைக் "குத்தகைக்கு" எடுத்துள்ளது Qu'est-ce qu'on a fait au bon dieu? திரைப்படம். 10 மில்லியன் பார்வையாளர்களுடன் பிரான்ஸ் திரைப்பட வரலாற்றில் வெற்றிவாகை சூடிய திரைப்படங்களின் பட்டியலில் முதல் பத்துக்குள் காலடி எடுத்து வைத்துள்ளது. வெகு விரைவில் இதுவரை முதல் இடங்களில் இருக்கும் Bienvenue Chez les Chtis (2008), Intouchables (2011) திரைப்படங்களின் சாதனைகளை முறியடிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.




## ஆண்டவா! நாங்கள் என்ன பாவம் செய்தோம்?

உலகத்தரப்பில் பிரான்ஸ் திரைப்படங்களுக்கென்று ஒரு தனியிடமுண்டு. கலையம்சம், சொல்லப்படும் விதம், பேசும் அரசியல் என விருது விழாக்களில் எப்போதும் அவை இடம் பிடித்துவிடும். ஆனால் இப்படிச் சில சாதாரண மனிதர்களின் வாழ்க்கையைப் பேசும் நகைச்சுவை ததும்பும் திரைப்படங்கள் பிரான்ஸ் மக்களின் மனதைக் கொள்ளை கொண்டு சாதனைகளை படைத்து விடும். பிரான்ஸ் மக்கள் சாதாரணமாகவே நகைச்சுவை உணர்வு அதிகமானவர்கள். One man show கள், நாடகங்கள் திரைப்படங்கள் எனத் தேடித்தேடி ரசிப்பார்கள். Louis de Funes முதல் Dany Boon, Jamel debbouze என நகைச்சுவை நடிகர்களுக்கும் பஞ்சமில்லை.

பிரான்சின் கத்தோலிக்க, பழமைவாத கருத்துகள் கொண்ட வயதான பெற்றோர்கள், அவர்களுக்கு நான்கு மகள்கள், பெற்றோர் தங்கள் மகள்களுக்கு தகுதியான, கத்தோலிக்க மணமக்களை தேவாலயத்தில் முறைப்படி திருமணம் செய்துவைக்க வேண்டும் என்ற கனவோடு வாழ்கின்றனர். ஆனால் மகள்களோ, ஒருவர் மாறி ஒருவராக முதலாமவர் ஒரு இஸ்லாமியரையும், இரண்டாமவர் ஒரு யூதரையும், மூன்றாமவர் ஒரு சீனநாட்டவரையும் கரம் பிடிக்கின்றனர். நான்காவது மகளோ ஒரு ஆபிரிக்கரைக் காதலிக்கிறார். அங்கேமட்டும் ஒரேயொரு நிம்மதி அவர் ஒரு கத்தோலிக்கர்! ஒவ் வொரு திருமணத்தையும் பெற்றோர்கள் எவ்வாறு எதிர் கொண்டார்கள் இறுதியில் என்ன நடந்தது என்பதே கதை. என்னதான் பழமைவாதிகளாக பிரான்ஸ் நாட்டு பெருமை பேசுபவர்களாக இருந்தாலும் தங்கள் பிள்ளைகள் அல்லவா? வெளியுலகுக்கு குறிப்பாக தங்கள் பிள்ளைகளுக்கு அவர்கள் மனம் நோகாமல் தாங்கள் திறந்த மனம் படைத்தவர்கள் எனக் காட்ட வேண்டிய கட்டாயம் பெற்றோர்களுக்கு. இன மத வேறுபாடு கொண்ட மருமக்கள் தங்களுக்குள் வெளிப்படுத்தும் இன மத வெறுப்புகள் தற்போதைய பிரான்சின் முகத்தைப் பிரதிபலிக்கச் செய்யும் வண்ணம் நகைச்சுவையை அள்ளித் தூவி சிரிக்கச் சிரிக்க திரைக்கதையை நகர்த்தி அதில் வாகையும் சூடியுள்ளார் இயக்குனர்.

திரைக்கதையை தூக்கிநிறுத்துவது நகைச்சுவைக்கு அப்பால் பெற்றோராக வரும் Christian Clavier ம் Chantal Lauby ம் ஆகும். Christian Clavier இவர் Les Visiteurs, Astérix et Obélix எனப் பல வெற்றிப்படங்களில் நடித்தவர், பிரான்ஸ் சினிமாவின் பெருந்தூண் என வர்ணிக்கப்படுபவர். மற்றவர் Chantal Lauby நடிகை, திரைக்கதை ஆசிரியர், இயக்குனர் என பன்முக ஆளுமைமிக்கவர். இத்திரைப் படத்தை திரைக்கதை, வசனம் எழுதி Philippe de Chauveron இயக்கியுள்ளார்.

## Métro 14




பாரிஸ் நகரின் முதலாவது தானியங்கி மெத்ரோவான 14, 15 ஒக்டோபர் 1998ல் சேவைக்குட்படுத்தப்பட்டது. இது வரை Saint Lazare நிறுத்தத்திலிருந்து Olympiadesநிறுத்தம் வரையிலான சேவை, தற்போது Saint Lazare நிறுத்தத்திலிருந்து வடக்கு நோக்கிப் பயணித்து Mairie de Saint Ouen புதிய முடிவிடத்திற்கு நீடிக்கப்படவுள்ளது.

நாளுக்கு 600 ஆயிரம் மக்கள் பயணிக்கும் 13ம் இலக்கத்தடம் RATP ன் மிகவும் பலவீனமான தடமாகும். 14ம் இலக்க மெத்ரோவின் புதிய மாற்றங்கள் 13ம் இலக்க மெத்ரோவின் பலவீனங்களை ஈடுகட்டுவதுடன் போக்குவரத்து நெரிசல்களையும் சரி செய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது. சுரங்கப்பாதை அமைப்பதற்கான செலவீனங்களாக 1,38 மில்லியாட் யூரோக்களும், புதிய மெத்ரோ வண்டிகளை பணிக்குட்படுத்துவதற்கான செலவாக 100 மில்லியன் யூரோக்களும் கணக்குக் காட்டப்பட்டுள்ளன. கட்டுமானப் பணிகள் 3 வருடம் நீடிக்கவுள்ளன. அத்துடன் நின்றுவிடாமல் Olympiades நிறுத்தமும் தெற்கு நோக்கி பயணித்து Orly விமான நிலையம் வரை நீடிப்புப் பெறவுள்ளது. இத்திட்டம் 2027ல் முடிவு பெறும்.

அழுக்கை சுத்தமான துணியினால் அகற்றுங்கள்!

சங்கீதா அச்சகம்
39, Bd La Chapelle - 75010 PARIS
01 44 72 08 94



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# • துயர் பகிர்வு •



அமரர்
**பூரணம் தனுஸ்கோடி**
(நெடுந்தீவு மேற்கு 4ம் வட்டாரம்)
தோற்றம் : 15. 05. 1935
மறைவு : 19. 05. 2014



அமரர்
**மயில்வாகனம் தங்கம்மா**
(யாழ். நல்லூர் வைரவ ரோட்)
தோற்றம் : 23. 06. 1927
மறைவு : 19. 05. 2014



அமரர்
**வீரசிங்கம் தேவதாஸ்**
(யாழ். புங்குடுதீவு 3ம் வட்டாரம்)
தோற்றம் : 24. 08. 1955
மறைவு : 25. 05. 2014



அமரர்
**துரையப்பா கணநாதமுத்துலிங்கஐயா**
(யாழ். அராலி கிழக்கு)
தோற்றம் : 06. 01. 1957
மறைவு : 27. 05. 2014



அமரர்
**சுப்பிரமணியம் இராஜேஸ்வரி**
(வேலணை கிழக்கு)
தோற்றம் : 30. 04. 1948
மறைவு : 29. 05. 2014



அமரர்
**வைத்திலிங்கம் சின்னம்மா**
(யாழ். மண்கும்பான் மேற்கு)
தோற்றம் : 29. 04. 1927
மறைவு : 08. 06. 2013



அமரர்
**வடிவேலு பொன்னுச்சாமி**
(யாழ். அராலி கிழக்கு)
தோற்றம் : 05. 01.1932
மறைவு : 23. 06. 2014




அமரர்
**மானார் சிதம்பரநாதன்**
(கண்டாவளை, பிரான்ஸ்)
தோற்றம் : 18. 08. 1934
மறைவு : 29. 05. 2014



அமரர்
**நடராஜா மதியூகன்**
(யாழ்.வண்ணார்பண்ணை)
தோற்றம் : 23. 02. 1978
மறைவு : 18. 07. 2014



அமரர்
**ஆறுமுகம் சுப்பிரமணியம்**
(நெடுந்தீவு)
தோற்றம் : 06. 08. 1940
மறைவு : 27. 07. 2013




# அவசர சிகிச்சைக்கு இரு சக்கர வண்டிகள்

பாரிஸ் நகரில் வாகன நெரிசலின் போது அவசர சிகிச்சைக்குப் பயன்படுத்த இருசக்கர வண்டிகள் பரீட்சார்த்தமாக பரிசீலிக்கப் பட்டுள்ளன. தகவல் கிடைத்த ஐந்து நிமிடத்தில் மருத்துவர் நோயா ளியைச் சென்றடைவதற்கான முயற்சியே இதுவாகும்.


இம் முயற்சி பாரிஸ் கார்–து–நோத் (Gare du Nord) பகுதியில் அமைந்துள்ள லறிபுஅசியர் (lari-boisière) மருத்துவமனையிலேயே ஆரம்பமாகின்றது. இதில் வாகன ஓட்டி ஒருவரும் மருத்துவரும் செல்வர்.

SAMU என்கின்ற அமைப்பே இத்திட்டத்தைக் கொண்டுவருகின்றது. தற்போதைய வாகனங்களை விட இரு சக்கர வண்டி மூன்றில் ஒரு பங்கு நேரத்தில் அவசர தேவைக்கு சென்றுவிடும்.

இப்புதிய சேவை ECB (Emergency City Bike) என அழைக்கப்படும். ஆரம்பத்தில் இரண்டு இருசக்கர வண்டிகள் சேவையில் விடப்பட்டுள்ளன.

## தொடர்ந்து உயரும் வீதி விபத்துகள்

வேகக் கட்டுப்பாடு 90km/h இலிருந்து 80km/h ஆக குறைக்கப்பட்டும் கடந்த மூன்று மாதங்களில், சென்ற ஆண்டைவிட கூடுதலா–னோர் இறந்துள்ளனர். 2013 / 2014 ஆண்டுகளில் வீதி விபத்துக்கள் பங்குனி, சித்திரை, வைகாசி மாதங்களில் 28%, 8,1%, 15,2% ஆக இறப்புகள் உயர்ந்துள்ளன. இறந்தோர் தொகை மே 2013 இல் 224 ஆகவும் மே 2014 இல் 258 ஆகவும் உயர்ந்துள்ளது.




பிரான்ஸ் மொழியில் மொழிபெயர்க்கப்பட்ட
**கி.பி.அரவிந்தனின் கவிதைநூல்**
3.6.2014 அன்று பாரிஸில் வெளியிடப்பட்டது.
திரு. அப்பாசாமி முருகையன் அவர்களின் உதவியுடன் இந்நூல் மொழிமாற்றம் செய்யப்பட்டது.



அமரர்
**விசுவாசம் ரோசலின் பூமணிஅம்மா**
(சாவளை மேற்கு)
தோற்றம் : 05. 11. 1930
மறைவு : 15. 04. 2014



அமரர்
**சதாசிவம் ஜீவதாஸ்**
(3ம் வட்டாரம், புங்குடுதீவு)
தோற்றம் : 27. 03. 1965
மறைவு : 17. 05. 2014

## பழமை

**பழமையைப் பற்றி எதுவுமே தெரியாமல் புதுமையைச் சிறப்பாகப் படைக்க முடியாது.**

## அழகு

**ஒருவரது பண்பே அவரது அழகைக் காட்டுகிறது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 70வது வருட நினைவு




**1944 யூன் மாதம்** 6ம் திகதி அதிகாலை. ஜேர்மனிய நாசிப்படையணிகளைத் தகர்த்தெறிய மாபெரும் தரையிறக்கம் நோர்மன்டிக் கடற்கரையில் நடந்தேறியது. இரண்டாம் உலக மகாயுத்தம் முடிவை நெருங்கும் தருணம் அது. பிரான்ஸ் படையணிகளுக்கு உதவிசெய்து பிரான்ஸ் நாட்டை மீட்க இத்தரையிறக்கம் வான் வழியாகவும், கடல் வழியாகவும் நிகழ்த்தப்பட்டது. நேசப்படையணியில் அமெரிக்கா, இங்கிலாந்து மற்றும் கனடா நாட்டைச்சேர்ந்த 156 ஆயிரம் வீரர்கள் தரையிறக்கப்பட்டனர். அன்றைய நாளில் மட்டும் நேசப்படையணிகளில் 8442 வீரர்களும் எதிர்த்து நின்ற 50 ஆயிரம் ஜேர்மனிய படைவீரர்களில் 5000 பேரும் மரணமடைந்தனர். இரண்டாம் உலகப்போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான முக்கிய நிகழ்வாக இத்தரையிறக்கம் நினைவு கூரப்படுகிறது. இந்நாளே D Day (Dèbarquement Normandie) என அழைக்கப்படுகின்றது.

பிரான்ஸ் ஒவ்வொரு வருடமும் இந்நாளை நன்றியுடன் நினைவு கூருகின்றது. இவ்வருடம், 70 வருட நினைவு பாரிய அளவில் பிரான்ஸ் அரசால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அரச தலைவர்கள் முன்னாள் போர் வீரர்கள் மற்றும் உல்லாசப்பயணிகள் எனத் திரண்டிருந்த பெரும் மக்கள் கூட்டத்துடன் அது நினைவு கூரப்பட்டது. அமெரிக்க அதிபர் ஒபாமா, இங்கிலாந்து அரசி எலிசபெத் II உட்பட 18 வெவ்வேறு நாட்டுத் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

தரையிறக்கம் நடைபெற்ற ஐந்து நோர்மெண்டிக் கடற்கரைகளில் ஒன்றான Caen நகருக்கு அண்மையில் அமைந்துள்ள Sword கடற்கரையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மாபெரும் நினைவு கூரல் நிகழ்வு பிரான்ஸ் அதிபர் பிரான்சுவா ஹொலந்தின் தலைமையில் இடம்பெற்றது.




இது நோர்மெண்டியில் Omaha கடற்கரைக்கு அண்மையில் 70 கெக்ரர் பரப்பளவில் அமைந்துள்ளது. அதிகார பூர்வமாக 1956ல் அறிவிக்கப்பட்ட இத்துயிலும் இல்லத்தில் 9388 படை வீரர்கள் அடக்கம் செய்யப்பட்டுள்ளனர். இதில் 307 வீரர்கள் அடையாளம் தெரியாதவர்களாகும்.

அமெரிக்க அதிபர்களான Jimmy carter (1977 - 1981) முதல் தற்போதைய அதிபர் Obama வரை இத்துயிலும் இல்லத்திற்கு அஞ்சலி செலுத்துவதை ஓர் வழக்கமாக கொண்டுவருகின்றனர். வருடத்துக்கு ஒரு மில்லியன் வருகையாளர்களைக் கொண்டுள்ள இத்துயிலும் இல்லமே உலகில் அதிகமக்களால் பார்வையிடப்பட்ட துயிலும் இல்லமாகும்.

## வருடாந்தம் 10 கோடி உல்லாசப் பயணிகளை கவர்ந்திழுக்க பிரான்ஸ் முனைப்பு!



**வெளி விவகாரத்துறை** மற்றும் அபிவிருத்தி அமைச்சர் லோறன்ஸ் பபியுஸ் (Laurent Fabius) அதற்கான சில திட்டங்களை முன்வைத்துள்ளார்.

- ஞாயிற்றுக்கிழமைகளிலும் சுற்றுலா வலயங்களில் Galeries Lafayette, Printemps போன்ற பெரிய கடைகளைத் திறக்க முயற்சி எடுத்தல்.
- எதிர்வரும் ஜனவரியில் விமான நிலையத்தில் இருந்து பாரிஸ் வரும் A1 பெரு வீதியில், டாக்சி, பஸ் போன்ற பயணிகள் வாகனம் செல்ல தனிப் பாதை ஒதுக்குதல்.
- லண்டனிலிருந்து பாரிஸ் நோக்கி வரும் பயணிகளின் Gare-du-Nord தொடருந்து நிலையத்தை மேலும் நவீனமயப்படுத்தப்படுத்துதல்

என்பன அமைச்சரின் திட்டங்களாகும். மேலும் நாடளாவிய ரீதியில் செல்லும் உல்லாசப் பயணிகளிற்கு இலவச wifi சேவை வழங்குவதோடு சுற்றுலாத் தளங்களை இலகுவில் சென்றடைய ஆலோசனைகளும் வழங்கப்படும்.



அடுத்த 15 ஆண்டுகளில் உல்லாசப் பயணிகள் தொகை இரட்டிப்பாகும் சாத்தியம் உள்ளதால் பிரான்ஸ் தனது நடவடிக்கைகளை முடுக்கிவிட்டுள்ளது.

அத்துடன் வருவாயை நோக்கமாகக் கொண்டு அமெரிக்கா, ஸ்பெயின் போன்ற நாடுகளில் பிரான்ஸ் கண் வைத்துள்ளது.

- 2012 இல் 83 மில்லியன் சுற்றுலாப் பயணிகள் பிரான்ஸ் வந்துள்ளனர்.
- 2013ம் ஆண்டில் உலக அளவில் 1.1 மில்லியாட் (110 கோடி) பயணிகள் சுற்றுலா சென்றுள்ளனர்.
- 2012ம் ஆண்டில் 42 மில்லியாட் (42000 கோடி) யூரோக்களை வருமானமாகப் பிரான்ஸ் பெற்றுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

orange™

# முதலிடம்!


பிரான்ஸ் மின்னியல் தொலைத் தொடர்புக் கட்டுப்பாட்டு அதிகார சபை (L'Arcep) பிரான்சின் தொலைத் தொடர்பு நிறுவனங்களின் தரம் மற்றும் சேவை தொடர்பான தரப்படுத்தலை வெளியிட்டுள்ளது.

நெட்வேர்க் மற்றும் அதன் துரித சேவையை அளவிட 90000 ஆய்வுகளை மேற்கொண்டனர். குறிப்பிட்ட பல்வேறு பகுதிகளில் இரண்டு நிமிட அடிப்படையில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. SMS பெறப்படும் வேகம், தொலைபேசித் தொடர்பின் தரம், பதிவிறக்க வேகங்கள் எனப் பலதும் பரிசீலிக்கப்பட்டது.


பிரான்சின் முன்னிலைத் தொலைத்தொடர்பு நிறுவனமான Orange சராசரிக்கும் அதிகமான புள்ளிகளுடன் முதலிடத்தைப் பெற்றுள்ளது. அடுத்த இடங்களை Bouygues Telecom ம் SFR ம் பிடித்துள்ளன. பிரான்சின் நான்காவது தொலைத்தொடர்பு நிறுவனமான Free சராசரிக்கும் குறைவான புள்ளிகளைப் பெற்று அதிகாரசபையின் கண்காணிப்புக்குள் தள்ளப்பட்டுள்ளனர்.

சந்தையில் அதிரடி விலைக்குறைப்புகள் எனக் களமிறங்கினாலும் Free தனது நெட்வேர்க்கை மேம்படுத்துவதற்கான முன்னெடுப்புகளை எடுக்காததே இந்நிலைக்குக் காரணமாகும் எனக் குறிப்பிட்ட L'Arcep 2015 ஜனவரிக்குள் 75 சதவீத பிரான்ஸ் மக்களை தமது 3G சேவைக்குள் உட்படுத்தவிருக்கும் Free தனது சேவையையும் தரத்தையும் சரியாக மக்களுக்கு கொடுக்க வேண்டியது கட்டாயமே எனவும் குறிப்பிட்டுள்ளனர்.

Free தொலைபேசி நெட்வேர்க் தொடர்ந்து விமர்சிக்கப்பட்டாலும் Free, குற்றச்சாட்டுகளைத் தொடர்ந்து மறுத்தே வருகிறது என்பதும் குறிப்பிடத்தக்கது.



**2013ம் ஆண்டில்**
**670 கோடி யூரோ**
பெறுமதியான ஆயுதங்களை பிரான்ஸ் வெளிநாடுகளிற்கு விற்றுள்ளது. 2012ம் ஆண்டில் இடம்பெற்ற விற்பனையைவிட இவ்வருடம் இத்தொகை 42% அதிகமானதாகும்.



'வெலிப்' (Velib)

**2 வயதில் இருந்து** 8 வயதிற்கு இடைப்பட்ட குழந்தைகளிற்கு ஏற்றதான துவிச்சக்கர வண்டிகளை Velib நிறுவனம் வாடகைக்கு விட முன்வந்துள்ளது. பாரிஸ் 07-12-19 வட்டாரங்களில் உள்ள பூங்காக்கள் மற்றும் குழந்தைகள் விளையாடும் இடங்களை அண்மித்த பகுதிகளில் இவை அமையவுள்ளன. ஒரு மணி, அரைநாள், முழுநாள் போன்றவற்றிற்கான வாடகை முறையே 4€, 7€, 10€ என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் பாரிஸ் மாநகரசபையின் அனுசரணையுடன் செயற்படுத்தப்படுகின்றது.




## வீட்டு வரிக்கு சலுகை!

(Taxe d'Habitation)

**இந்த ஆண்டு வீட்டு வரி**

செலுத்துபவர்களில் 236 000 பேருக்கு வரிச்சலுகை அளிக்கப்படவுள்ளது. 3 குழந்தைகள் அல்லது அதற்கு மேற்பட்ட குழந்தைகள் உள்ள குடும்பத்தினருக்கு இவ்வாய்ப்பு கிடைக்க உள்ளது. இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் போது 96 மில்லியன் யூரோக்களை அரசு இழக்கிறது.

## போர்த்துக்கலில் நாட்டைவிட்டு வெளியேறுவோர் தொகை அதிகம்!

2013ம் ஆண்டில் 128 108 பேர் பொருளாதாரம் மற்றும் தொழில் பிரச்சனைகள் காரணமாக நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர். 2012ம் ஆண்டைவிட 2013 இல் வெளியேறியோர் தொகை அதிகம். இவர்களுள் மூன்றில் ஒரு பகுதியினர் நிரந்தரமாகவே சென்ற இடங்களில் தங்கிவிடுகின்றனர்.

## ஸ்பெயின் நாட்டில் 27.5% குழந்தைகள் ஏழ்மையில்

யூன்மாத இறுதியில் யுனிசெப் (Unicef) வெளியிட்ட அறிக்கை 18 வயதிற்கு குறைவான 27.5% ஆன இளவயதினர் ஸ்பெயினில் ஏழ்மையில் வாழ்வதாகத் தெரிவித்துள்ளது. அண்ணளவாக 23 இலட்சம் குழந்தைகள் பிரச்சனைகளை எதிர்நோக்கிய வண்ணம் உள்ளனர். 2007 - 2013 காலப் பகுதியில் வேலை இல்லாத இளைஞர்கள் தொகை 29% இனால் அங்கு அதிகரித்துள்ளது.

## கருணைக் கொலைக்கு 89% ஆனோர் ஆதரவு

பிரான்ஸ் நாளிதளான 'லு பரிசியன்' (Le Parisien) ஆனி மாதம் எடுத்த புள்ளி விபரத்தின்படி 89% ஆன பிரான்ஸ் நாட்டவர் கருணைக்கொலைக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர். அவர்களுள் 98 வீதமானவர்கள் 65 வயதிற்கு மேற்பட்டவர்களாவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று உங்கள் அற்புத நாள்!

## Aujourd'hui c'est votre jour de Miracle

அன்பானவர்களே!
உங்கள் வாழ்க்கையில் எப்பேற்பட்ட பிரச்சினைகள், வேதனைகள், துன்பங்கள், வியாதிகள், மன பிரம்மை, தற்கொலை எண்ணங்கள் எவையாக இருந்தாலும் அவைகளை தீர்த்துவைக்க ஒருவர் உள்ளார்.
அவர்தான் ஆண்டவராகிய யேசு கிறிஸ்து.
இங்கு நடை பெறும் ஆராதனைகளில் வந்து கலந்து கொண்டு
உங்கள் பிரச்சினைகளிலிருந்து விடுதலை பெற்றுச் செல்லுங்கள்

## சபை ஆராதனை நடைபெறும் இடங்கள்
## Les lieux de cultes

### தலைமைச்சபை Eglise Principale

**தமிழ் ஆராதனை**

இடம் :
**Assemblée Chrétienne du bon berger**
**215, avenue du président Wilson - 93210 La Plaine Saint Denis**
RER'B' (La Plaine Stade de France)
RER 'D' (Stade de France St.Denis)
Métro:Porte de la Chapelle இல் இருந்து பஸ் 153 5வது தரிப்பிடம் Pont de Soissons, Inter-Hôtel முன்பாக
**தொடர்புகளுக்கு :**
**06 99 11 19 68, 06 64 93 62 37 / 06 07 54 40 62,**
**06 61 18 95 30, 01 49 98 23 20**
**ஞாயிறு மாலை 4 மணிக்கு தமிழ் ஆராதனை**

**Réunion En Français**

Lieu :
**Assemblée Chrétienne du bon berger**
**215, avenue du président Wilson - 93210 La Plaine Saint Denis**
RER'B' (La Plaine Stade de France)
RER 'D' (Stade de France St.Denis)
Métro: Porte de la Châpelle / Bus : 153 5éme arrêts
Pont de Soissons, Inter-Hôtel
**Contacts :**
**06 50 82 36 20, 06 26 36 11 08 / 01 49 98 23 20, 06 61 18 95 30**
**Dimanche 15h en français**

### கிளைச்சபைகள் Eglises Branches

**Viry-Châtillon சபை**

**விசேஷித்த ஆராதனை :**
சனி, ஞாயிறு மாலை 3.00 மணிக்கு தமிழ் ஆராதனை
Dimanche: Réunion en français 14h00
இடம் : **16 Rue de Ris**
**91170 Viry-Châtillon**
**RER-D, Viry-Châtillon**
**தொடர்புகளுக்கு:**
**06 58 33 65 13 06 51 12 65 85,**
**06 61 18 95 30 01 49 98 23 20**

**Gien சபை**

**ஆராதனை :**
**ஞாயிறு காலை 9.00 மணிக்கு**
**தொடர்புகளுக்கு :**
**02 38 67 80 72, 06 03 79 58 02**
**06 61 18 95 30, 01 49 98 23 20**

**Saint-Ouen சபை**

**சுகமளிக்கும் ஆராதனை :**
சனி மாலை 6 மணிக்கு தமிழ் ஆராதனை
**தொடர்புகளுக்கு :**
**06 99 11 19 68, 06 26 93 37 91**
**06 61 18 95 30, 01 49 98 23 20**

**Noisy-le Grand சபை**

**விசேஷித்த ஆராதனை :**
ஞாயிறு மாலை 3.00 மணிக்கு
Dimanche: Réunion en français 14h00
இடம்: **Centre Chrétien d'Evangélisation**
**19A, rue de l'Université**
**93160 Noisy le Grand**
**RER-A : Noisy-le Grand**
**தொடர்புகளுக்கு:**
**06 03 79 58 02, 02 38 67 80 72**
**06 61 18 95 30, 01 49 98 23 20**

## 23 வது ஆண்டு ஆசீர்வாத இன்னிசைப் பெருவிழா

**காலம் : ஆகஸ்ட் 2-3ம் திகதிகளில்**

**Eurosites Les Docks De Paris மண்டபத்தில்**
50, Avenue Du Président Wilson - 93200 La Plaine Saint Denis


போதகர்
டட்லி தங்கையா
(மதுரை)
Rev. DUDLEY THANGAIAH
(Mathurai - Inde)


போதகர்
சுரேஷ் ராமச்சந்திரன்
(இலங்கை)
Rev. SURESH RAMACHANDRAN
(Mount Carmel Church - Kandy - Sri Lanka)

Jésus t'aime

# சீயோன் சுவிசேஷ சபை
# EGLISE EVANGELIQUE DE SION

PARIS - FRANCE N° D'ENREGISTREMENT : 1/00084

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகரியா 4:6 Zacharie 4:6




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**பிரான்ஸ் நாட்டில்** தற்போது ஓய்வு பெறும் வயது சட்ட ரீதியாக 62 ஆகும். 1ம் திகதி யூலை 1951க்கு முன் பிறந்தவர்கள் 60வயதில் ஓய்வு பெறலாம்.

உ+ம்: கீழ் அட்டவணையைப் பார்க்கவும்

| பிறந்த திகதி | சட்டப்படி ஓய்வு பெறுவதற்குரிய வயதும் தேவையான (Trimestre )ம் | பூரண ஓய்வூதியம் கிடைக்க தகுதியான வயதெல்லை |
|---|---|---|
| 1 யூலை1951க்கு முன் | 60வருடம்<br>163 Trimestres | 65 வருடம் |
| 1 யூலை முதல் டிசெம் 1951வரை | 60வரு.4மாதங்.<br>163 Trimestres | 65 வரு. 4மாதங்களும் |
| 1952ல் | 60வரு 9மாதங்<br>164 Trimestres | 65 வரு. 9மாதங்களும் |
| 1953ல் | 61வரு 2மாதங்<br>165 Trimestres | 66 வரு. 2மாதங்களும் |
| 1954ல் | 61வரு 7மாதங்<br>165 Trimestres | 66 வரு. 7மாதங்களும் |
| 1955 தொடக்கம் | 62வரு<br>166 Trimestress | 67 வருடங்கள் |




ஓய்வூதியத் தொகை (பணம்) இந்த வயதெல்லையை மட்டும் வைத்து கணக்கெடுப்படுவதில்லை. அதற்கென ஒரு அளவீடு செய்யும் ஒரு பொறிமுறை உள்ளது.

இந்தப் பொறிமுறை
(1) ஒருவரது பிறந்த ஆண்டு
(2) வேலை செய்த வருடங்களின் எண்ணிக்கை
(3) பெற்ற சம்பளத்தின் அளவு
(4) பிள்ளைகளின் எண்ணிக்கை
என்பனவற்றை வைத்தே மதிப்பிடப்படும்.

தாய்மாருக்கு ஒரு பிள்ளைக்கு தலா 2 வருடங்கள் என வேலை செய்திருக்க வேண்டிய மொத்த ஆண்டுகளிலிருந்து கழிவு உண்டு.

ஓய்வூதியத்தை கணக்கிடுவதற்கு 02 நிறுவனங்கள் இணைந்து செயற்படுகின்றன.

**1. L'Assurance Retraite - Caisse Nationale D'Assurance Viellesse - CNAV**

இந்த நிறுவனம் ஒருவருக்குரிய Trimestres எத்தனை என்பதை கணக்கீடு செய்யும். இது வருடா வருடம் மாறியபடி செல்லும். ஆகக் கூடிய ஓய்வூதியம் கிடைப்பதற்கு ஒருவர் ஒரு வருடத்தில் 4 Trimestres பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில் வேலை செய்திருக்க வேண்டும்.

உ+ம்:- கீழ் அட்டவணையைப் பார்க்கவும்

| பிறந்த ஆண்டு | எடுத்திருக்க வேண்டிய Trimestres ன் எண்ணிக்கை |
|---|---|
| 1949க்கு முன் | 160 Trimestres |
| 1949ல் | 161 Trimestres |
| 1950ல் | 162 Trimestres |

**2. Retraite Complémentaire - CICAS (ARRCO)**

இந்த நிறுவனம் ஒருவருக்குரிய (nombre de points) எவ்வளவு என்பதனை கணக்கீடு செய்வது. இந்த (Nombre de Points) ஒருவர் வேலை செய்த மணித்தியாலங்கள், அவர் எடுத்த சம்பளத்தின் தொகையைப் பொறுத்து கணக்கிடப்படும். இந்த விபரம் அடங்கிய பட்டியல் முன்னைய காலங்களில் (ARRCO என்ற பெயரில்) உங்களுக்கு காலத்திற்கு காலம் தபாற் பெட்டியில் வந்து சேர்ந்திருக்கும்.

இப்பொழுது (CNAV) நிறுவனம் இணையத் தளத்தினூடாக நீங்கள் அப் பட்டியலைப் பார்க்கக் கூடியதற்கான பத்திரங்களை அனுப்பிவைக்கிறது.

இந்த விபரம் ஒருவர் வேலை செய்த நிறுவனங்களுக்கூடாக சேகரிக்கப்படும். சில சமயங்களில் உங்களுக்கு கிடைக்கும் பட்டியலில் தவறுகள் நேர வாய்ப்பு உண்டு. அதனால் மாதா மாதம் வரும் உங்களது சம்பளத் துண்டுகளை (Bulletin de salaire) நவ certificats de travail/ contrat de travail/ lettre d'embauche/ attestation de maladie, matrenité, ASSEDIC, Pôle emploi, livret militaire etc. etc.etc.) மிகவும் பத்திரமாக பாதுகாத்து வைத்திருக்கவேண்டியது மிக மிக அவசியமகும்.

அண்ணளவாக உங்களுக்குக் கிடைக்கக்கூடிய ஓய்வூதியத் தொகையை நீங்கள் பின்வரும் முறையில் கணக்கிட்டுக் கொள்ளலாம்.

நீங்கள் வேலை செய்திருந்த மொத்த ஆண்டுகளில் மிக அதிகம் (வருடமொன்றுக்கு) சம்பளம் எடுத்த 25 ஆண்டுகளின் சம்பளத்தைக் கூட்டி அதிலிருந்து ஒரு வருடத்திற்கான சராசரித் தொகையை கணக்கிட்டு அத் தொகையின் 50 வீதத்தை எடுத்து வரும் தொகையை 12ஆல் பிரித்து வருவதே மாத ஓய்வூதியமாகும்

இறுதியாக நீங்கள் செய்யவேண்டியது. நீங்கள் வசிக்கும் பகுதிக்குரிய (L'Assurance Retraite) CNAV முகவரிக்குச் சென்று (Carte Vitale) கொடுத்து சகல விபரங்களையும் இலகுவில், சிரமங்கள் ஏதுமின்றிப் பெற்றுக்கொள்ளலாம்.



பாரிஸ் 12 லுள்ள
புதிய மிருகக் காட்சிச்சாலையை
500 000 (5 இலட்சம்)பார்வையாளர்கள்
பார்த்திருக்கின்றார்கள்.
12 வயதிற்கு குறைவான குழந்தைகள்
சனி - ஞாயிறு நாட்களில்
இலவசமாக பார்வையிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 72 மில்லியன் வென்ற அதிர்ஷ்டசாலி

## 50 மில்லியன் யூரோக்களை நன்கொடையாக வழங்கினார்!

**பிரான்சின்** தெற்குப்பகுதியான Haute Garonneல் யூரோ மில்லியன் வெற்றியாளர் தனது வெற்றித்தொகையில் நான்கில் மூன்று பகுதிகளை நன்கொடையாக வழங்க முன் வந்துள்ளார். ஜனவரி மாதம் 72 மில்லியன் யூரோக்களை வென்றிருந்த இவர் அதில் 50 மில்லியன் யூரோக்களை தேசிய அளவிலான சில நலன்புரி அமைப்புகளுக்கு வழங்கவுள்ளார்.

2004 முதல் நடைபெற்று வரும் யூரோ மில்லியன் விளையாட்டில் இவரின் வெற்றித்தொகை பிரான்சின் ஏழாவது முக்கிய தொகையாகும். பிரான்சின் இரண்டாவது பெருந்தொகையான 101 மில்லியனை வென்றவரும் Haute Garonne ஐ சேர்ந்தவரே என்பதும் குறிப்பிடத்தக்கது.

கடந்த 10 வருடங்களில் பிரான்சில் மட்டும் 20 மில்லியன் யூரோக்களுக்கு அதிகம் வென்ற 30 வெற்றியாளர்கள் உள்ளனர். இப் போட்டிகளுக்குப் பொறுப்பான (FDJ Française des jeux) வெற்றியாளர்களின் அடையாளங்களை மிகவும் இரகசியமாகப் பேணி வருகின்றது. அது மட்டுமல்லாது வெற்றியாளர்களுக்கு சரியான முதலீடு செய்வது, நன்கொடை வழங்குவது தொடர்பாகவும் முறையான செலவுகள் கணக்குகள் செய்வது தொடர்பாகவும் பயிற்சிப்பட்டறைகளை வருடா வருடம் ஏற்பாடு செய்து வருகிறது. இவ்வாறான பெருவெற்றியாளர்கள் நன்கொடைகள் வழங்க முன்வருவது ஒன்றும் ஆச்சரியம் இல்லை. இருப்பினும் தனது வெற்றிப்பணத்தில் இவ்வாறான பெருந்தொகையை வழங்குவது பிரான்சில் இது தான் முதற்தடவை எனவும் கோடிடப்பட்டுள்ளது.

## EURO MILLIONS

- 190 மில்லியன் – அதி கூடுதல் வெற்றித்தொகை வெற்றியாளர்கள் இங்கிலாந்தைச் சேர்ந்தவர்கள்
- 169 மில்லியன் – பிரான்சின் அதிகூடிய வெற்றிப்பணமாகும்.
- பிரான்சில் அதிகமான நலன் புரி அமைப்புகள் Euro Millions வெற்றியாளர்களின் நன்கொடை அனுசரணையை பெற்றுள்ளது.
- 2012ல் 169 மில்லியன் யூரோக்கள் வென்ற நீஸ் (Nice) ஐச் சேர்ந்த வெற்றியாளர் தொடர்ந்தும் வேலைக்குச் சென்று வருகிறார்.
- 2008ல் Saint Michel (Charente) பகுதியைச் சேர்ந்த 50 மில்லியன் வெற்றியாளர் அவரது பகுதியில் கலாச்சார மையம் அமைக்க மாநகர சபைக்கு 400 ஆயிரம் யூரோக்களை அளித்ததோடு பாடசாலை உணவகத்திற்கான ஒரு வருடச் செலவையும் பொறுப்பெடுத்துக் கொண்டார். பின்னர் தொடர்ந்து இன்று வரை இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தியும் வருகின்றார்.


**Sachchi Education – Annamalai University**

**சித்தி தரும் ரியூஸன் கல்வி**

- உங்கள் பிள்ளைகளின் றிப்போட்டில் மதிப்பெண் குறைவாக இருக்கின்றதா ?
- அடுத்த வகுப்புக்குப் போக வகுப்பு நிலை போதவில்லையா ?

எங்களிடம் அனுப்புங்கள் உறுதியாக முன்னேற்றித் தருகின்றோம்!

இம் முதற்பாடசாலை படிப்புக்கும் ஒழுக்கத்திற்கும்

**No : 1 ஆக இருப்பதற்கான காரணங்கள்...**

- பிரெஞ்சுக் கல்வி முறையில் நீண்டகால அறிவும் தகுதியுடனான அனுபவமும் உடைய நிர்வாகம்
- கல்வித்தகமையும் கற்பிப்பதில் அனுபவமும் உடைய பிரெஞ்சு ஆசிரியர்கள்
- மாணவர்களை தனித்தனியே கவனிக்கும் கல்வி முறை
- மாணவர்களுக்கான பெரிய கல்விநூலகம்
- குறைந்த கட்டணத்தில் எல்லாப் பாடங்களையும் கற்பிக்கும் வசதி

- École : PS.MS. GS. CP.CE1. CE2. CM1. CM2. Clin...
- Collège : 6e. 5e. 4e. 3e. Segpa. Clipa...
- Lycée : Seconde. Première. Terminale, BEP. CAP. BTS ...

- புதிய மொழி வகுப்புகள் :

பிரெஞ்சு, தமிழ், ஆங்கிலம்

தொடக்க நிலை, இடைநிலை, உயர் நிலை. பேச்சு மொழி. மற்றும்

பரதநாட்டியம், வாய்ப்பாட்டு, வயலின், குங்க்/பூ, கணினி

sachchithanantham@gmail.com

70, rue Philippe de Girard 75018 PARIS Tél : 01 46 07 16 00



அல்லையூர் செய்திகளை உடனுக்குடன் அறிந்திட

http://www.allaiyoor.com





மண்டைதீவு திருவெண்காடு சித்திவிநாயகர் ஆலய இணைய முகவரி

www.thiruvenkadumandaitivu.com





## நன்றி கிடைக்கப்பெற்றோம்!

பாரில்

இந்திரா கணேஷின்

**சிறுகதைகள்**

அன்று உனக்கு...

இன்று எனக்கு...



Marisol Touraine

## 2017 முதல் மருத்துவரை சந்திக்கும்போது செலுத்த வேண்டிய முற்பணம் செலுத்தத்தேவையில்லை!

ஏற்கனவே இம்முறை CMU பெறுவோருக்கு அமுலில் உள்ளது. இத் திட்டத்தை சுகாதாரத்துறை அமைச்சர் Marisol Touraine அறிவித்துள்ளார்.

இது தவிர அவசர தேவைக்கு ஒரு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருத்துவரைத் தொடர்பு கொள்வதற்கு இலகுவாக நினைவில் வைத்துக் கொள்ளக்கூடிய தொலைபேசி இலக்கம் அறிமுகப்படுத்தப் படவுள்ளது. மூன்று இலக்கங்களில் ஒவ்வொரு பகுதிக்கும் (Departement) இத் தொலைபேசி இலக்கம் வரவுள்ளது. இவ்விலக்கம் 24 மணித்தியால சேவையில் செயற்படும்.


**உங்கள் அச்சுத்தேவைகளுக்கு நாடுங்கள்!**

**சங்கீதா அச்சகம்**


## உணவுப்பொருட்களின் தரத்தை விளக்க இலகுவான தெளிவான முறை!

**உணவுப் பொருட்களின்** பெட்டிகள் மற்றும் உறைகளில் உணவுப் பொருட்களின் தரம் தொடர்பான விபரங்கள் தெரிவிக்கப்படவேண்டியது சட்டம். இருப்பினும் அவை மிகச் சிறிய எழுத்தில் விளக்கம் குறைவாகவே அச்சிடப்பட்டிருப்பதால் நுகர்வோர் அதைக் கருத்திற் கொள்வதில்லை அல்லது அசௌகர்யத்திற்கு உள்ளாகின்றனர். இதைக்கவனத்தில் கொண்டு இலகுவாக விளங்கிக்கொள்ளும் வகையில் நிறமாற்றங்கள் சின்னங்கள்



(Logo) மூலம் அடையாளப்படுத்தப்படவுள்ளன. உதாரணமாக பச்சை ஆரோக்கியமான உணவு, சிவப்பு கொழுப்பு, சீனி அதிகமான உணவு என வகைப்படுத்தப்படவுள்ளன.



### முன்னாள் ஜனாதிபதி சார்க்கோஸி

## கைதாகி விடுதலை

கடந்த 30 யூன் 2014 அன்று முன்னாள் ஜனாதிபதி சார்க்கோஸி பிரான்ஸ் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டு 17 மணிநேரம் காவலில் வைத்து விசாரணைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்.

2007ம் ஆண்டில் இடம்பெற்ற ஜனாதி-பதித் தேர்தல் பிரசாரங்களிற்கு முறைகே-டான ரீதியில் நிதி பெறப்பட்டமை தொடர்பாகவே இவர் விசாரணைக்கு உள்ளாக்கப்பட்டிருந்தார். இவருடன் சட்டத்தரணி ஒருவரும் இரண்டு உயர்நீதிமன்ற நீதியரசர்களும் கைதுசெய்யப்படிருந்தனர். புலன் விசாரணைகளின் ஒரு பகுதியாக இவர்களின் வீடுகளும் சோதனைக்குள்ளாக்கப்பட்டன.

பிரான்சின் முதல்தர செல்வந்தப் பெண்மணியும் Oréal அழகு சாதனப் பொருள் நிறுவனருமான லிலியான் பெத்தன்கூர் அவர்களிடமிருந்து தேர்தல் பிரசார நிதியினை பணமாக பெற்றமை மற்றும் முன்னாள் அரசியல்வாதியும் வர்த்தகருமான பேர்னாட் தப்பி அவர்களிடமிருந்து முறைகேடான முறையில் 40 கோடி (400 மில்லியன்) யூறோக்கள் அரச பணத்தை தேர்தல் காலத்தில் மறைமுகமாக பெற்றுக்கொண்டமை தொடர்பாகவும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வழக்குகளின் போக்கின் உள் விபரங்களை அறிவதற்காக சட்டத்தரணி ஒருவருக்கு மொனோக்கோவில் அரச உயர் பதவி கைமாறாக வழங்க எடுக்கப்பட்ட முயற்சி விடயமாகவும் சார்க்கோஸி மீது விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2017ம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட திட்டமிட்டு சார்க்கோஸி முன்னோக்கி நகர்கின்ற வேளையிலேயே இக் கைதும் விசாரணையும் இடம் பெற்றுவருகின்றது.

## நிலா

நிலாவினைப்பெற்றுக்கொள்ள..

**சங்கீதா அச்சகம்**
39, Bld. de la Chapelle - 75010 PARIS

**ரூபி அச்சகம்**
10, Rue Labat - 75018 PARIS

CHANGE MAGENTA
77, Bld. de Magenta - 75010 PARIS

ASI BOUCHERIE
195, Rue du Fbg.St.Denis - 75010 PARIS

**தமிழ்ச்சோலை -பாரிஸ் 17**

M.G.A. Coiffure
20, Rue Roger Salengro - 93700 Drancy

**யாழ் இறைச்சிக்கடை**
6, Rue Perdonnet - 75010 PARIS

SACHI EDUCATION
70, rue Philippe de Girard - 75018 PARIS

NRS COIFFURE
5B, Av. Alexis Varagne - 95 Villiers le Bel

**நாக ஜோதி மளிகை**
C.C Pte de la Ville - 95140 Garges Les Gonesse.

**மாயவர் - மொழிபெயர்ப்பு**
208, Bis Rue du Fbg St.Denis - 75010 Paris

MGR VIDEO
5, Rue Perdonnet - 75010 Paris

SARL VARNISHA COIFFURE
111, rue de l'Ouest - 75014 Paris

**தமிழாலயம்**
19, Rue Cail, 75010 Paris

**மாலா மளிகை**
4, Place de Salengro - Garges les Gonesse

**அறிவாலயம் புத்தகசாலை**
7, Rue Perdonnet (M°: La Chapelle)

**Karan Coiffure**
203, Rue de Fbg St.Denis (M°: La Chapelle)

SHAEE CASH & CARRY
193, Rue de Fbg St.Denis (M°: La Chapelle)

RESTAURANT PARADISE
10, Av. Louis Aragon, Bobigny (M°: Bobigny)

**ஞானமணி பல்பொருள் அங்காடி**
218, Rue. Anatole Francy - 93 Drancy

**அம்பாள் ஸ்ரோஸ்**
192, Rue du Fbg.St.Denis - 75010 PARIS

**தமிழ்ச்சோலை-தமிழ்ச்சங்கம்**
Le Blanc Mesnil

FUN TELECOM
139, Av.de St.Ouen - M°: Pte de St. Ouen)

**கிருஷ்ணா அச்சகம்**
73, Rue Doudeauville - 75018 Paris

GADS EXO
14, Bis, rue Emile zola 93400 St.Ouen
M°: Pte de St. Ouen)

**ஈடுபாட்டுடன் செய்யப்படும் எந்த வேலையும் மகிழ்ச்சி தரும்.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்களிலும் தொடர்ந்தது. யூத மக்களின் மதக் கூடமான சினகொக் மீதான தாக்குதல் யூத வர்த்தக நிலையங்கள் தீக்கிரை என வன்முறை உச்சத்தை எட்டியது.

அதிருப்தியின் உச்சத்துக்கு தள்ளப்பட்ட பிரான்ஸ் மக்கள் இத்தகைய அதீத வன்முறைகளுக்கு அரசின் பிழையான முன்னெடுப்பே காரணம் எனக் குற்றஞ் சுமத்துகின்றனர்.

பேரணிகளுக்கு தடைவிதிக்காது, பேரணி நடாத்த அனுமதி வழங்கி அதைப் பாதுகாப்பான முறையில் செயற்படுத்தியிருக்கலாம் என்பது பொதுவான கருத்தாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

உட்துறை அமைச்சரின் தடை உத்தரவை தான் முற்றாக ஆதரிப்பதாகக் கருத்துத் தெரிவித்த பிரதமர் மனுவல் வால்ஸ் அனுமதிக்கப்பட்ட பேரணிகளில் தலைவிரித்தாடிய வன்முறைகளைத் தொடர்ந்தே பேரணிக்கான தடை பிறப்பிக்கப்பட்டது என்கிறார். இது தொடர்பாக கருத்து வெளியிட்ட பிரான்ஸ் அதிபர் பிரான்சுவா ஹொலந், பிரான்ஸ் சகல இனத்தவர்களும் மதத்தவர்களும் சேர்ந்து வாழும் ஒரு தேசிய நாடு. இங்கு இத்தகைய இன, மத எதிர்ப்புகளை அனுமதிக்க முடியாது. மாறாக இத்தகைய எதிர்ப்புகளுக்கு எதிராக பிரான்ஸ் மக்கள் ஒன்றுபட்டு செயற்பட வேண்டியது கடமை எனவும் தொடர்ந்து ஒடுக்கப்படும் பாலஸ்தீனிய மக்களின் துன்பங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் எனவும் அதற்கு தான் தன்னாலான முழுமுயற்சி எடுத்து வருவதாகவும் தெரிவித்தார். ●







## வெற்றிடமாக இருக்கும் வர்த்தக நிலையங்களுக்கு வரி!

**பாரிசில்** பல அலுவலகங்கள், வர்த்தக நிலையங்கள் வெற்றிடமாக உள்ளன. இரண்டாண்டுகளுக்கு மேலாக இவ்வாறு இருப்பவற்றிற்கு வரி அறவிட பாரிஸ் மாநகரசபை முடிவெடுத்துள்ளது. எதிர்வரும் ஜனவரி 1ம் திகதியில் இருந்து இவ் வரி அமுலுக்கு வரும். தற்போது, பாரிசில் 18 மில்லியன் சதுர மீற்றர் பரப்பளவுள்ள அலுவலகங்கள், வர்த்தக நிலையங்கள் உள்ளன. இவற்றுள் 6% - 7% ஆனவை வெற்றிடமாகவே உள்ளன. இவற்றுள் இரண்டு இலட்சம் சதுரமீற்றர் பரப்பளவுள்ள இடங்கள் வசிப்பிடங்களாகவும் மாற்றப்பட உள்ளன.

**● வேலையற்றோருக்கான உதவித்தொகை அதிகரிக்கின்றது.**

28,38 யூரோவாக இருந்த நாளாந்த கொடுப்பனவு 28,52 யூரோவாக உயர்வுள்ளது. மீள வேலை தேடுபவர்களின் (Allocation d'aide au retour) நாளாந்த கொடுப்பனவு 11,64 யூரோவிலிருந்து 11,72 யூரோவாக உயர்கிறது. உதவித்தொகை பெறுவோரில் மூன்றில் இரண்டு வீதமானோருக்கே இவ் உதவி கிட்டவுள்ளது.

V.S. கிருஷ்ணபிள்ளை
(மாயவர்)
மொழிபெயர்ப்பாளர்

புதிய முகவரி :
208, Bis Rue du Fbg St.Denis
75010 Paris
Hot breads - தமிழ் bakery அருகில்
M°: La Chapelle
/ Gare du Nord
Tél.: 06.86.38.10.57



**இந்த உலகில்**

**எதுவுமே நிரந்தரமானதல்ல.**

**கவலைப்படாதீர்கள்**

**பிரச்சினைகளும் தான்!**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org